# தீபம்

www.deepam.lk

28.07.2015 - 03.08.2015, தீபம் 2

விலை
10 ரூபா





# யாருக்கு வாக்களிக்கலாம்?

ஒவ்வொரு முறை தேர்தல் சமயத்திலும், 'இது தமிழ் மக்களிற்கு மிக முக்கியமான தேர்தல்' என்றுதான் எல்லா கட்சிகளும் சொல்கின்றன. ஒவ்வொரு முறையும் தேர்தலை முக்கியப்படுத்த ஏதாவதொரு விடயம் அரசியல்வாதிகளிற்கு கிடைத்துவிடும். ஒவ்வொரு தரப்பின் அரசியல் நோக்கம் சார்ந்த ஏதாவதொரு விடயம் சிக்கிவிடும். இந்த காரணத்தின் அடிப்படையில் மக்கள் தவறாமல் வாக்களிக்க வேண்டுமென்று ஒவ்வொரு கட்சிகளும் வீட்டுப் படலைகளை தட்டிக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும்தான் வேட்பாளர்கள் உங்கள் வீடுகள் தேடி வருகிறார்கள்.

ஒவ்வொரு கட்சியின் இலக்கையும் உங்களின் இலக்காக சித்தரிப்பார்கள். உங்கள் ஒவ்வொருவருக்காகவுமே அரசியலில் ஈடுபடுகிறேன், இல்லையென்றால் எப்பொழுதோ கதிர்காமப் பக்கம் போய் முக்தியடைந்திருப்பேன் என்பார்கள். உங்கள் வீட்டுபடலையை தட்டும் எல்லா வேட்பாளர்களுமே நிச்சயமாக உங்கள் ஒவ்வொருவரின் சுபீட்ச வாழ்விற்காகத்தான் அரசியலில் இருக்கிறார்கள். இதை நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும். எனினும், நீங்கள் வாக்களிக்க வேண்டியது இதற்காக அல்ல. முதலில் உங்கள் ஒவ்வொருவரின் வாக்குரிமையும் பயன்படுத்தப்பட வேண்டும். அது உங்களின் அத்தியாவசியமான ஜனநாயக கடமை. நீங்கள் அதை பயன்படுத்தாது விட்டால், உங்கள் பெயரில் இன்னொருவர் அதனை துஷ்பிரயோகம் செய்யும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகிறீர்கள்.

நமதுஒருவாக்குத்தானே என நீங்கள் அசட்டையாக இருக்க முடியாது. இப்படியிருக்கும் ஒவ்வொருவரின் அசட்டையும் இணையும் போது, அது ஒரு ஜனநாயக விரோத முடிவை ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது. மக்களால் நேர்மையாக தேர்வு செய்யப்படாத ஆட்சியொன்று அமையவும் வாய்ப்புள்ளது. மேலே சொன்ன ஒரே காரணத்திற்காகவே மக்கள் வாக்களிக்க வேண்டியது முதலாவது கடமை.

கடந்த ஜனாதிபதி தேர்தல் இதற்கு நல்ல உதாரணம். கடந்த ஆட்சி ஒவ்வொரு இனக்குழுமத்திற்கிடையிலும் வெவ்வேறான பிரதிபலிப்பை உண்டாக்கியிருந்தது. ஒவ்வொரு சமூகத்தின் ஆட்சியாளர் தேர்வு வெவ்வேறானதாக இருந்தபோதும், சிறுபான்மை சமூகங்களின் அதிகரித்த வாக்களிப்பு நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தேர்தலிலன்று நான்கு இலட்சம் மக்கள் வீடுகளில் விட்டத்தை பார்த்து தூங்கியிருந்தால் என்ன நடந்திருக்கும்? மேலே சொன்னது முதலாவது. இரண்டாவது, யாரிற்கு வாக்களிக்க வேண்டுமென்பது. இம்முறை காட்சி புத்தம் புதியது. மாவையும் தேசியம் பேசுகிறார். டக்ளசும் தேசியம் பேசுகிறார். கஜேந்திரகுமாரும் தேசியம் பேசுகிறார். அங்கஜனும் தேசியம் பேசுகிறார். ஆனந்தசங்கரியும் தேசியம் பேசுகிறார். மணி, மாட்டுக்கன்று, மாங்காய் போன்ற சின்னமுள்ள சுயேட்சைக்குழுக்களும் தேசியம் பேசுகிறார்கள். ஒட்டுமொத்தத்தில் இது தமிழர்களின் தேசியத் தேர்தலாகிவிட்டது.

இந்த தேசியம் புதியதல்ல. வார்த்தைகள் சற்று வேறுபடலாம். கடந்த அறுபது வருடங்களாக பேசப்பட்டு வரும் தேசியத்தின் ஆகப்பிந்திய தயாரிப்பிது.

எல்லோரும் ஒரே விடயத்தைத்தான் வெவ்வெறு வார்த்தைகளில் பேசுகிறார்கள் எனில், எதற்காக இந்த குத்துவெட்டு? மாறி மாறி சேறுபூசல்? இப்பொழுது இன்னொரு மிகப்பெரிய கேள்வியை எழுப்பலாம். எல்லோரிடமும் மிகக்கவர்ச்சிகரமான இலக்குகள் இருக்கின்றன. அது தமிழர்களை மகிழ்ச்சிப்படுத்தக் கூடியதுதான். ஆனால், அந்த கவர்ச்சிகரமான இலக்குகளை சென்றடையும் வரைபடங்களை எத்தனைபேர் வைத்திருக்கிறார்கள்? அப்படியான வரைபடத்தை சொல்லிலோ செயலிலோ காண்பிக்காதவரை, இவை கவர்ச்சிகரமான சீன உற்பத்தி இலத்திரனியல் பொருட்களை போலாகிவிடாதா? தேர்தல் வரை பாவித்து விட்டு தூக்கியெறியத்தான் பயன்படுமா?

தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தேசியம் பேசுவதனடிப்படையில், தமிழ் மக்களின் தேசியப்பிரச்சனையை தென்னிலங்கை கட்சிகளின் பிரதிநிதிகளுட்பட்ட அனைத்து தரப்பும்

தொடர்ச்சி 5-ம் பக்கம்




வலிகாமம்
மீள் குடியேற்றத்துக்கு
தடையாக இருப்பது யார்?



யாழ்ப்பாண பெண்களின்
ஆடை ரகசியங்கள்!



ஜெயலலிதாவுக்கு
என்ன ஆச்சு?



அடுத்த
பிரதமர்
யார்?

உள்ளே...



# இது மக்களின் தீபம்!

'தீபம்' பத்திரிகையின் முதலாவது இதழுக்கு வாசகர்களிடமிருந்து கிடைத்த பேராதரவு உண்மையில் பிரமிப்பூட்டுவதாக இருந்தது. இப்படியொரு வரவேற்பை நாங்கள் கற்பனையும் செய்து பார்த்திருக்கவில்லை. வயது, பால் வேறுபாடின்றி அனைவரையும் தீபம் வசீகரித்திருக்கிறது.

'தீபம் இலத்திரனியல் ஊடகங்களின் எதிர்பார்ப்பை வைத்து, அவற்றின் ஊடகப்பணியில் நம்பிக்கை வைத்து, தீபத்துடன் இணைந்திருக்கும் மக்கள், தீபம் ஊடகக் குழுமத்தில் இருந்து வெளியான இன்னொரு பரிமாணத்திற்கு எந்த தயக்கமுமின்றி பேராதரவு தந்திருக்கிறீர்கள். இந்த பேராதரவு என்பது தீபத்தின் கடந்த 15 வருட நீண்ட பயணத்தால் ஏற்பட்டது. ஊடகங்கள் எனப்படுவது வர்த்தக, அரசியல் நோக்கங்களை அடைவதற்கான குறுக்குவழிகள் என மாறிவரும் சமயத்திலும், ஊடகப் பெறுமானங்களை கடக்காமல் தீபம் ஆற்றிவரும் பணியினால் ஏற்பட்டது. உங்கள் பேராதரவு அந்தப்பணியின் பொறுப்புணர்வை மீளவும் ஒருமுறை எமக்கு நினைவூட்டியுள்ளது. இதே பாதையில் தொடர்ந்தும் முன்செல்லும் ஆத்ம பலத்தையும் அதிகரித்துள்ளது.

இதேசமயத்தில் தீபம் தொடர்பான ஒரு விசமப் பிரச்சாரமும் இரகசியமாக முன்னெடுத்து செல்லப்படுவதை நாமறிவோம். கடந்த பத்தாண்டுகளில் இலங்கையின் ஆட்சி முறையில் ஏற்பட்ட மாற்றம், ஒரு தொகுதியினரின் சிந்தனைகளையும் வெகுவாக மாற்றியுள்ளது. மக்களை ஏய்ப்பதற்காக திரும்பத் திரும்ப சொன்ன ஒன்றை அவர்களே உண்மையென நம்பிவிடும் பரிதாபநிலைக்கு வந்துள்ளனர்.

புலம்பெயர்ந்தவர்கள் என்ற வார்த்தையின் உண்மையான பெறுமானம் புரியாது. புலம்பெயர்ந்தவர்களை புரியாது, புலம்பெயர்ந்தவர்கள் என்றாலே அது புலிகள்தான் என்பது விதமான சிறுபிள்ளை சிந்தனையாக்கத்தை மேற்கொண்டனர். இதில் துயரம் என்னவெனில், இந்த சிந்தனை, ஆக்கம் பெற்று மக்களிடம் பரவலடையவில்லை. மாறாக, அவர்கள் தாங்களே நம்பி சுயதிருப்திப்பட்டுக் கொண்டனர்.

தீபம் எந்தகட்சியினதும், எந்த அரசியல் நிலைப்பாட்டினதும், எந்த கருத்துருவாக்க குழுவினதும் பத்திரிகை அல்ல. தீபம், மக்கள் பத்திரிகை.

இலங்கைத்தீவின் பெரும் அரசியல் எழுச்சி, வீழ்ச்சியெல்லாம் நிகழ்ந்து முடிந்தது கடந்த பதினைந்து ஆண்டுகளில்தான். இந்தக் காலப்பகுதியைத்தான் தீபம் கடந்து வந்துள்ளது. கடந்த பதினைந்து வருடங்களில் ஏற்பட்ட எந்த அரசியல் எழுச்சியும் நீடிக்கவில்லை. அதன் பின்னான சில காலத்திலேயே சுவடேயின்றி மறைந்து போனது. கடந்த ஜனவரி 8 கூட நல்ல உதாரணம்.

தீபம் எந்த குழுவினதும், நிலைப்பாட்டினதும் பிரசார முகவரெனில் அது ஏதோ ஒரு திகதியில் இழுத்து மூடப்பட்டிருக்க வேண்டும். ஆயினும், எல்லா சவால்களையும் அவதூறாளர் களையும் கடந்தே பயணிக்க வேண்டியிருக்கிறது. எப்பொழுதும் தன்னிலை விளக்கங்கள் கூறிக் கொண்டிருக்க வேண்டியது மில்லை. தீபம் கடந்த காலத்தில் தன்னை நிரூபித்ததை போல, இனிவரும் காலங்களிலும் எல்லா அவதூறுகளையும் செயற்பட்டே கடக்கும். கட்சிகள், தனிநபர்கள் பற்றிய பிரசாரம் தீபத்தின் ஊடகப்பணியல்ல. தாக்குதல்களும் உத்தியல்ல.

எல்லா குரல்களிற்கும் தீபம் களம் கொடுக்கும். பல்குரல்களே ஜனநாயகத்தின் அடிப்படையென்பதில் தீபம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த அடிப்படையிலேயே தீபத்தின் எதிர்கால செயற்பாடுகள் அமைந்திருக்கும்.

– ஆசிரியர்,
தீபம்

**அலுவலகம்**
**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
**தொலைபேசி**
யாழ்ப்பாணம்: 0212216633 ஐக்கிய ராச்சியம் 00442034687086
மின்னஞ்சல்: info@deepamtv.tv

# சொன்னார்கள்



## அநுரகுமார திசநாயக்க

"மகிந்த ராஜபக்சவிற்கு 70 வயதாகிவிட்டது. பூட்டனை போல வீட்டிலிருக்க வேண்டியவர். ஆசை. வந்துவிட்டார். அவர் பாராளுமன்றத்துடன் ஓயமாட்டார். இந்த தேர்தலில் தோல்வியடைந்ததும் தென் மாகாணசபை தேர்தலிலும் போட்டியிடுவார். அதில் தோல்வியடைந்தால், பெலியத்தை கூட்டுறவுசபை தேர்தலிலும் போட்டியிட்டுத்தான் ஓய்வார்."



## பசில் ராஜபக்ச

"வடக்கு மாகாணசபை தேர்தலில் விக்னேஸ்வரனிற்கு வழங்கப்படாத 76,000 வாக்குகள், ஜனாதிபதி மைத்திரிக்கு வழங்கப்பட்டுள்ளது. இது எப்படி நிகழ்ந்ததென்று தெரியவில்லை. புதிய வாக்காளர்களின் தொகை மற்றைய பகுதிகளில் 1.2 வீதமாக இருக்கின்றபோது, வடக்கில் அது 4.7 வீதமாக உள்ளது."




## விநாயகமூர்த்தி முரளிதரன்

"இலங்கை அரசியலை மாற்றும் மந்திரம் எனக்கு தெரியும். அதனால் அரசியலை விட்டு ஓடப்போவதில்லை. நடக்க முடியாதவர்கள், கைத்தாங்கலாக அழைத்துச் சென்று கதிரையில் உட்கார வைக்கப் படவேண்டியவர்கள் அனைவருக்கும் ஐ.ம.சு.கூவில் இடம்கொடுக்கப்பட்டுள்ளது. நான் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியவன். எனது பெயரை தேசியப்பட்டியல் விபரத்தில் இரண்டாவதாக எழுதியது தெரியும். இறுதியில் காணவில்லை."



## கோத்தபாய ராஜபக்ச

"என் அண்ணன் மகிந்த ராஜபக்ச ஒரு சர்வாதிகாரி கிடையாது. அவர் ஜனநாயகவாதி. அதனால்தான் வடக்கில் தேர்தலை நடத்தினோம். அவர் சர்வாதிகாரியாக இருந்திருந்தால் இன்றும் அவர்தான் ஜனாதிபதியாக இருந்திருப்பார். நான்தான் பாதுகாப்பு செயலாளராக இருந்திருப்பேன். வெளிநாடுகளும், சிவில் சமூக குழுக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை கவிழ்த்துவிட்டன."



## சித்தார்த்தன்

"தேர்தல் முடிவுகள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டை மாற்றப்போவதில்லை. தமிழ்மக்களின் பிரச்சனைகளை தீர்க்க தொடர்ந்தும் பாடுபடுவோம். எந்த ஆட்சி அமைந்தாலும் அழுத்தம் கொடுக்க வேண்டிய சமயத்தில் அழுத்தம் கொடுத்தும், பேசித் தீர்க்க வேண்டிய இடத்தில் பேசியும் பிரச்சனைகளை தீர்க்கும் எமது நிலைப்பாட்டில் மாற்றமிருக்காது."



## ரணில் விக்கிரமசிங்க

"மகிந்த ராஜபக்ச எதற்காக மீண்டும் ஆட்சிக்கு வரத் துடிக்கிறார்? ஜனாதிபதியாக இருந்து செய்ய முடியாததையா எம்.பியாகி செய்ய துடிக்கிறார்? அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாதென்றார். செய்தோம். விலைவாசியை குறைக்க முடியாதென்றார். குறைத்தோம். அவர் பத்து வருடங்களில் செய்ய முடியாததை நூறு நாட்களில் செய்துள்ளோம்."



## மஹிந்த ராஜபக்ச:

உங்களுடைய கருத்துக்ளை ஓரளவுக்கு நான் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அதனால் தான் "நாம் செய்த தவறுகள் குறித்து அக்கடி சுயவிமர்சனம் செய்வதுண்டு. தவறை திருத்துவதற்கு முதல் அதனை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஏணைய அரசியல் பிரமுகர்களை விட நாம் எங்களை சுய விமர்சனம் செய்துள்ளோம் என நான் நினைக்கிறேன். நாமே எமது தவறுகளை திருத்திக்கொள்ள தயாராக இருக்கிறோம்."



## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்:

"தமிழ் மக்களின் உரிமைகளையும், தேவைகளையும் போராடி பெற்றுக்கொண்டதாக வரலாறு எமக்கு கற்பிக்கின்றது. தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் சிந்தனையும் அதுவே. மக்கள் மயப்படுத்தப்பட்ட இயக்கமாக நாம் உரிமைகளையும், எங்கள் தேவைகளையும் பெற்றுக்கொள்வோம்"



## விமல் வீரவன்ஸ:

"மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதற்காக நடைபெற்ற மாநாட்டை அரச ஊடகங்கள் ஊடக நேரடியாக ஒளிப்பரப்பு செய்ய 8 லட்சம் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது. எனினும் இந்தப் பணத்தை கட்சி செலவிடவில்லை என்ற தகவல் எனக்கு கிடைத்துள்ளது"



## மங்கள சமரவீர:

"இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு, இந்நாட்டில் வாழும் சிங்கள, முஸ்லிம், தமிழ் மற்றும் பரங்கியர் அனைவரும் இலங்கையர்களாக வாழக் கூடிய, இலங்கையர்கள் எனும் அடையாளத்தை ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே சாத்தியப்படும். இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வை நாட்டில் தற்போது இருக்கும் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் காண முடியாது. புதிய அரசியல் சாசனம் ஒன்றின் மூலமே அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடனும் சகவாழ்வுடனும் வாழ வழி ஏற்படும்"

## மகிந்த ராஜபக்ச..

# அஸ்திரங்கள் இல்லாத போர்க்களம்

இன்னும் மூன்று வாரங்கள் கூட இல்லை பாராளுமன்ற தேர்தலிற்கென்றால் நம்பவா முடிகிறது? வீதிகளில் ஒரு போஸ்ரரை காணவில்லை. ஒரு கட்அவுட் இல்லை. எந்த பரபரப்பும் இல்லை. கடந்த ஜனாதிபதி தேர்தல் வரையான இலங்கையின் தேர்தல் களிற்கு பழக்கப்பட்டவர்கள், தேர்தலிற்கு இன்னும் நாளிருக்கிறதென்று ஒகஸ்ட் 17ம் திகதியும் ஏதாவது காரியத்தை பார்த்து கொண்டிருந்து விடக்கூடும். ஒகஸ்ட் 17 ஐ நன்றாக குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் வேலையற்ற வர்கள், சமுர்த்தி உதவி பெறுபவர்கள், அரச ஊழியர்கள் அனைவரும் ஒவ்வொரு பிரதேசத்திலும் திரட்டப்பட்டு கூட்டங்களில் மகிந்த ராஜபக்ச ராஜபக்ச ராஜநடையிட்டு சென்று உரை நிகழ்த்தினார். இல்லாத புலி களை ஒவ்வொரு மேடையிலும் ஏற்றினார். ஒவ்வொரு கூட்டத்திலும் புலிகளும், போர் வெற்றியும் அவரது பேச்சில் நிறைந்திருந்தது.

மறுவளமாக மைத்திரி அணி, கனவுகளை விதைக்காமல் தரையில் நின்று பேசியது. அவர்கள் ஏழைகளின் வயிற்றை பற்றி பேசினார்கள். எத்தனை நாள்தான் தென்னிலங்கையினாலும் போர்வெற்றி யினால் வயிற்றை நிறைத்துக் கொள்வது? அதுவும் செரிமானம் அடையக்கூடியது தானே. பசிக்கும்தானே... மகிந்த ராஜபக்ச விடம் தமிழர்களிற்கு தீர்க்கப்பட வேண்டிய கணக்கும், சிங்களவர்களின் பசியும் சேர்ந்தபோது, அவர் வீட்டுக்கு சென்றார்.

அந்த வீழ்ச்சியெனப்படுவது தனியே மகிந்த ராஜபக்சவின் வீழ்ச்சியல்ல. ஒரு அரசியல் கலாசாரத்தின் வீழ்ச்சி. இலங்கையை ஆபத்தை நோக்கி அழைத்து சென்ற அரசியல் கலாசாரம். அதிகாரத்தையும், பணத்தையும், குடும்ப ஆதிக்கத்தையும் மட்டும் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட அரசியல் கலாசாரம். சடுதியாக வீழ்ந்த அதிகார மையத்துடன் ஒவ்வொரு பிரதேசத்தின் நாட்டாமைகளும் வீழ்ந்தார்கள். மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் தமிழர்கள் தரப்பிலிருந்து அதிகம் ஜனநாயகப்பட்டிருக்காத சிறிய குழுக்கள் பலதையே சேர்த்து வைத்திருந்தார். அவர்களுடன் களமிறங்கி வெற்றிபெறலா மென நம்பினார்கள். யதார்த்தத்தை புரிந்துகொள்ள விடாமல் அவர்கள் அதிகாரத்திலும், போர்வெற்றி மயக்கத்திலும் ஆழ்ந்திருந்தார்கள்.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் நடக்கும் இந்த தேர்தல் இலங்கையர்களிற்கு முற்றிலும் புதுமையானது. அமைதியான, ஜனநாயக மான தேர்தலொன்றை யுத்தத்தின் குழந்தை களான இளம் சந்ததியொன்று அனுபவித்த தேயில்லையென அடித்து சொல்லலாம்.

இந்தவகை தேர்தலை எதிர்கொள்வது சாதாரண இலங்கை வேட்பாளர்களிற்கு சவாலானது. பதவியிலிருந்த சமயத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுவிட்டு, தேர்தல் சமயத்தில் வாகனங்களில் மக்களை ஏற்றிவந்து பிரசாரம் செய்து பதவிக்கு செல்வதென்பது எவ்வளவு மோசமான அரசியல் கலாசாரம்? இந்த புதிய அரசியல் கலாசாரத்தில் அதிகம் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் காணப்படுகிறார்.

ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் அதிகம் புலிகளை பற்றியே பேசினார். புதிய ஆட்சியமைந்தால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலென்றார்கள். நாடு பிரிந்துவிடும் என்றார்கள். ஆனால் மக்களிற்கு வயிறு பசித்தது. தேர்தல் முடிவின் பின்னர் நாடு பிளவுபடவுமில்லை. தோல்வியின் பின்னர் சில வாரங்கள் வீட்டிலிருந்த ராஜபக்ச மீண்டும் அரசியலிற்குள் நுழைய முயன்ற சமயத்தில், மகிந்த அணி பெரும்பான்மை சிங்கள வாக்குகளையே குறிவைத்தார்கள். அதற்காக அவர்கள் தேர்வு செய்தது இனவாதத்தை. மகிந்தவின் மீள அழைக்கும் அவரது ஆதரவாளர்களின் முதலிரு கூட்டங்களை அவதானித்தவர்களிற்கு தெரியும், அங்கு எவ்வளவு இனவாத கருத்து பரப்பப்பட்டதென்பது. விமல், கம்மன்பில, வாசுதேவ கூட்டணி வெளியிட்ட இனவாத கருத்துக்கள் பேரச்சம் தருவதாக இருந்தது. எனினும், மிகச்சில நாட்களிலேயே மகிந்த அணி சுதாரித்து விட்டதாக தெரிகிறது. பின்னைய கூட்டங்களில் முன்னரைப் போல அவ்வளவாக இனவாத கருத்துக்களை வெளியிட்டதை அவதானிக்க முடியவில்லை.

சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இணைந்து கொள்வதற்கு அதனை ஒரு நிபந்தனையாக விதித்திருக்கலாம். அல்லது கடந்த ஜனாதிபதி தேர்தல் கற்றுக்கொடுத்த பாடமாகவும் இருக்கலாம். அல்லது மகிந்த ராஜபக்ச தனது புதல்வர்களின் நீண்ட எதிர்காலத்தை கருதி, அதனை தவிர்த்திருக்கலாம்.

இதில் என்ன சுவாரஸ்யமெனில், இந்த இனவாத பிரசாரத்தை தவிர்த்துவிட்ட பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்ட மைப்பின் பிரசாரத்தில் எந்த சுவாரஸ்யமும், புதுமையும் இல்லாமல் போனதுதான். இனவாத பிரசாரத்தை தவிர்த்தால் மகிந்த அணியிடம் எந்த அஸ்திரமும் இல்லை. அநுராதபுரத்தில் நடந்த முதலாவது பிரசார கூட்டத்தில் மே 18 பற்றி மகிந்த உரையாற்றினார். புலிகளின் அச்சுறுத்தலை முறியடித்தேன் என்றார். அதன் பின்னான கூட்டங்களிலும் அதை கூறிவருகிறார்.





மகிந்த ராஜபக்சவின் கடந்த பத்தாண்டு அரசியல் பயணத்தில் அவர் மிக பலவீனமான நிலையில் இருந்து பிரசாரம் செய்வது இம்முறைதான். அவரிடம் எந்த அஸ்திரங்களும் இல்லை. பதவியாசையும், மீண்டும் வரவேண்டுமென்ற வைராக்கியமும் கண்ணை மறைக்க, அஸ்திரங்களற்று களத்தில் வீம்புக்கு நின்று கையை சுழற்றும் போர்வீரனைப் போல நிற்கிறார்.

எத்தனை நாளுக்குத்தான் சனங்களும் இதை கேட்பார்கள். சாப்பிடும்போது தொட்டுக் கொள்ளும் ஊறுகாயைப் போலானது அது. ஆனால் மகிந்த ஊறுகாயையே சாப்பிட கொடுத்தால் சனங்கள் என்ன செய்வார்கள்?

மகிந்த ராஜபக்சவின் கடந்த பத்தாண்டு அரசியல் பயணத்தில் அவர் மிக பலவீனமான நிலையில் இருந்து பிரசாரம் செய்வது இம்முறைதான். அவரிடம் எந்த அஸ்திரங்களும் இல்லை. பதவியாசையும், மீண்டும் வரவேண்டுமென்ற வைராக்கியமும் கண்ணை மறைக்க, அஸ்திரங்களற்று களத்தில் வீம்புக்கு நின்று கையை சுழற்றும் போர்வீரனைப் போல நிற்கிறார். நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அதிகமும் பொருளாதார அபிவிருத்தி, உற்பத்திதுறை விருத்தி மற்றும் வேலை வாய்ப்புக்கள் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்த முன்னணியில் துறைசார்ந்த திறமைசாலிகள் இருப்பது வாய்ப்பானதாக அமைந்துவிட்டது. பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் பற்றி ஒவ்வொரு கூட்டத்திலும் ரணில் விக்கிரமசிங்க பேசிக் கொண்டிருக்க, வடக்கிற்கு கேளாத மெல்லிய குரலில் மகிந்த புலிகளை பற்றி தென்மாவட்ட கிராமங்களில் பேசிக் கொண்டு திரிகிறார்.

நல்லாட்சியில் பொருட்கள் விலையேறி விட்டது, கிராமப்புறத்தை ஐ.தே.க மறந்துவிட்டது என்ற இரண்டேயிரண்டு புஸ்வாணங்களைத்தான் மகிந்த கொளுத்திப் போட முயன்று கொண்டிருக்கிறார். அண்மை யில் மாத்தறையில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய மகிந்த 'நல்லாட்சியில் மக்களின் உணவு கலாசாரத்தையே மாற்றிவிட்டார்கள். அதனை மீட்டுத்தருவேன்' என்றார். தென்னிலங்கையின் மீட்பராக தன்னை காட்டிக் கொண்ட ஒருவருக்கு நேர்ந்த கதியை பாருங்கள்.

அவரிடம் எந்த அஸ்திரமும் தற்போது இல்லை. அவர் ஆயுதங்கள் கிடைக்காமல் களத்திற்கு வந்துள்ளார். இந்த பலவீனமான நிலையே அவரை நிதானமிழக்க வைத்துள் ளதைப் போல்த் தெரிகிறது. அவரது பிரசாரக் கூட்டங்களை நுணுக்கமாக அவதானிப் பவர்களிற்கு இந்த உண்மை புலப்படும். இதன் தொடர்ச்சிதான் சில தினங்களின் முன்னர் மாத்தறை அக்குரஸ்சவில் கூட்டத் தில் இருந்தவர் ஒருவரை தாக்க பாய்ந்தது.

மகிந்த இப்பொழுது அடிபட்ட புலி. அவரால் நிதானமாக எதையும் சிந்திக்க முடியாமல் உள்ளதைப் போல்தான் தெரி கிறது. பிரசார கூட்டங்களில் திண்டாடுகிறார்.

ஒரு சாம்ராஜ்ஜத்தின் வீழ்ச்சி இப்படித் தான் இருக்கும் போல. முதலாம் தடவையில் வீழ்த்தப்பட்ட போதே அவர் கௌரவமாக வீட்டுக்கு சென்றிருக்க வேண்டும். அவரால் அது முடியவில்லை. அடிபட்ட புலி -இறக்கும்வரை கண்மூடித்தனமாக மோதுமாம்!

மகிந்த இப்பொழுது அடிபட்ட புலி. அவரால் நிதானமாக எதையும் சிந்திக்க முடியாமல் உள்ளதைப் போல்தான் தெரி கிறது. பிரசார கூட்டங்களில் திண்டாடுகிறார். ஒரு சாம்ராஜ்ஜத்தின் வீழ்ச்சி இப்படித் தான் இருக்கும் போல. முதலாம் தடவையில் வீழ்த்தப்பட்ட போதே அவர் கௌரவமாக வீட்டுக்கு சென்றிருக்க வேண்டும்.

# நிகழ்வுகள்



## அபிவிருத்திக் கண்காட்சி

பனை அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு வடமாகாண விவசாய அமைச்சு ஏற்பாடு செய்த பனை அபிவிருத்திக் கண்காட்சி 21ஆம் திகதி, நல்லூர் சங்கிலியன்தோப்பு நடைபெறுகிறது. ஆரம்ப வைபவத்தில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், எதிர்க்கட்சித் தலைவர் கே.தவராஜா, பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.






## நூல் வெளியீடு

வெலிகம ரிம்ஸா முஹம்மத் எழுதிய 'அறுவடைகள்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 2015 ஆகஸ்ட் 1 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து ஏற்பாடு செய்திருக்கும் இந்நிகழ்வு, தாயக ஒலி ஆசிரியர் திரு தம்பு சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவிருக்கிறது.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக இலண்டன் இலக்கிய நிறுவகத்தின் தலைவர் வவுனியூர் இரா உதயணன் அவர்களும் சிறப்பதிதிகளாக அல்ஹாஜ் எம்.எம்.சப்ரி, டாக்டர் அல்ஹாஜ் ஏ.பி. அப்துல் கையூம் (ஜே.பி), கே.அரசரத்தினம், ந.கருனை ஆனந்தன், உளவளவியலாளர் யூ.எல்.எம். நௌபர், மு. கதிர்காமநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். பிரபல தொழிலதிபர் அல்ஹாஜ் எம்.எம். சப்ரி நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார்.




வரவேற்புரையை தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவும், வெளியீட்டுரையை கவிஞர் நஜ்முல் ஹுஸைனும் நிகழ்த்த, கவி வாழ்த்தை தாஜுல் உலூம் கலைவாதி கலீல் பாடுவார். நயவுரையை திருமதி வசந்தி தயாபரன் வழங்க ஏற்புரையை நூலாசிரியரும், நன்றியுரையை ஊடகவியலாளர் கே. பொன்னுத்துரையும் நிகழ்த்துவார். இந்த நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகளை படைப்பாளி தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா தொகுத்து வழங்கவுள்ளார்.

'அறுவடைகள்' வெலிகம ரிம்ஸா முஹம்மதின் 11 ஆவது நூல் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.







## விருதுவிழா


அட்சரம் ஏற்பாட்டில் ராஜ ஸ்ரீகாந்தன் ஞாபகார்த்த குறும்படப் போட்டியின் விருதுவிழா 18.07.2015 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் யாழ் பீச் ஹோட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு சிறப்பு அதிதிகளாக கலை இயக்குநர், மற்றும் ஓவியராகிய ட்றொஸ்கி மருது அவர்களும் இயக்குநர் கவிதாபாரதி அவர்களும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் ஞானதாஸ், கோ.கேதாரநாதன் ஆகியோரும் அதிதிகளுடன் இணைந்து உரையாற்றினர்.

முதலாம் இடம் பெற்ற குறும்படம்: வெள்ளம் (விமல்ராஜ்)
இரண்டாம் இடம்பெற்ற குறும்படம்: கடிநகர் ( சஜீத்)
மூன்றாம் இடம்பெற்ற குறும்படம்: தொடரி (மதிசுதா)

**தனியாள் விருது பெற்ற குறும்படங்கள்**
சிறந்த கதைக்கான விருது: சூசைட்
சிறந்த இயக்குநர் விருது: கடிநகர்
சிறந்த நடிகருக்கான விருது: போலி
சிறந்த ஒளிப்பதிவாளர் விருது: வெள்ளம்
சிறந்த இசைக்கான விருது: ஏன் இந்த இடைவெளி
சிறந்த படத்தொகுப்புக்கான விருது: சூசைட்
சிறந்த குழந்தை நட்சத்திற்கான விருது: வெள்ளம், தேவதை
சிறப்பு விருது: ஏன் இந்த இடைவெளி



## தீபம் ஊடகக் குழுமத்திலிருந்து வெளிவரும் 'தீபம்' இதழுடன் இணைந்து பணியாற்ற விருப்பமா?



வீடும் வாழ்வும் (Home & Living ) வங்கியும் பணமும் (Bank & Money), பயணமும் ஓய்வும் (Travel & leisure), விஞ்ஞானமும் தொழிநுட்பமும் (Science & technology), குற்றமும் தண்டனையும் (Crime & punishment), கல்வியும் வேலைவாய்ப்பும் (Education & jobs) போன்ற துறைகளில் புதிய தகவல்களை தேடியறிந்து சுவாரஸ்ய மொழிநடையில் எழுதும் ஆற்றல் உள்ளதா? அல்லது இவற்றை மொழிபெயர்த்து எழுதும் ஆற்றல் இருக்கிறதா?

வழமையை மாற்றி புதிதான பரிமாணத்தை உருவாக்கும் பத்திரிகை துறைக்கான சிந்தனை இருக்கிறதா?

அரைத்த மாவை அரைப்பதில்லை என்ற உறுதியோடு இருக்கின்றீர்களா?

**அப்படியானால் தீபம் உங்களுக்கு களம் அமைத்துத் தர தயாராக இருக்கிறது.**
**உங்களின் திறமையை வெளிப்படுத்தும் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள்.**

மின்னஞ்சல்: media@deepamtv.tv deepamdesk@gmail.com ஐக்கிய ராஜ்ஜியம் - 00112034687086

# ஜெயலலிதாவுக்கு என்ன ஆச்சு?

ஜெயலலிதா உடல்நிலைக்கு என்னவாயிற்று என்பதுதான் இப்போது தமிழ்நாட்டு அரசியலில் சூடான விவாதப்பொருள். அவருக்கு கல்லீரல் பழுதுபட்டிருப்பதாகவும், அவரால் நடமாட முடியவில்லை என்றும் சொல்லப்படுகிறது. இது முழு பொய்யாக இருக்க வாய்ப்பு இல்லை. ஏனென்றால் சொத்துக்குவிப்பு வழக்கில், '8.5 சதவிகித' தீர்ப்புப் பெற்று விடுதலையாகி வந்த அவர், அந்த வெற்றியைக் கொண்டாடுவதற்குக் கூட வெளியில் வரவில்லை. தீர்ப்பு வந்த தினத்தன்று ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட வீட்டின் முன்பாக பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் கூடி நின்றார்கள். 18 ஆண்டு காலம் தன்னை துரத்திய வழக்கில் இருந்து விடுதலையாகி வரும்போது, தன் மீது சிறிதும் அன்பு குறையாமல் வரவேற்றுக் கொண்டாடும் தொண்டர்களுடன் உற்சாகமாக கை குலுக்கியிருக்க வேண்டாமா? முகம் நிறைந்த மகிழ்ச்சியுடன் ஓர் வெற்றி உரை ஆற்றியிருக்க வேண்டாமா? ஆனால் அவரோ வீட்டுக்குள் சென்று அடைந்துகொண்டார். யாரையும் சந்திக்கவில்லை. ஜெயலலிதா ஏன் இப்படி நடந்துகொள்கிறார்?



ஜெயலலிதா தொடர்ந்து செயல்பட முடியாத நிலை ஏற்படுமானால் அ.தி.மு.க.வின் அடுத்த தலைமையை ஏற்பது யார்? அப்படி ஒரு ஆப்ஷனே அந்தக் கட்சியில் இல்லை. அங்கு ஜெயலலிதா மட்டுமே அனைத்துமாக இருக்கிறார்

ஏனென்றால் இப்படி பெருந்தன்மையாக ஒதுங்கிச் செல்வது ஜெயலலிதாவின் குணம் அல்ல. 5 ரூபாய்க்கு திட்டம் தீட்டிவிட்டு 50 ரூபாய்க்கு விளம்பரம் தேடிக்கொள்வதுதான் அவரது பாணி. இது எம்.ஜி.ஆர். தொடங்கி வைத்தது. ஜெயலலிதா விடாமல் தொடர்கிறார்.

இதை அவரது அறிக்கைகளில் கூட காண முடியும். நான், என் தலைமையிலான அரசு, நான் வெளியிட்ட உத்தரவில், எனக்கு பிடித்த, என்னுடைய அரசு.. இப்படி எப்போதும் தான், தான் என்று அலைபவர் அவர். அதனால்தான் வேறு யாரையும் அருகில் சேர்ப்பது கூட இல்லை. அப்படிப்பட்ட குணம் படைத்த ஜெயலலிதா, சென்னையில் மெட்ரோ ரயில் திட்டத்தின் துவக்க விழாவில் கூட கலந்துகொள்ளாதது ஏன்? அதை ஒரு பிரமாண்ட விழாவாக நடத்தி மக்களிடம் நற்பெயர் தேடிக்கொள்ளும் நல்வாய்ப்பைத் தவறவிட்டு ஏன் வீடியோ கான்ஃபரன்சிங் முறையில் தொடங்கி வைக்க வேண்டும்?

மாநிலத்தின் தலைமைச் செயலகத்துக்குக் கூட வருவது இல்லை. பல கோடி ரூபாய் நலத் திட்டங்களின் துவக்க விழாக்கள் முதல்வரின் வருகைக்காகக் காத்திருக்கின்றன. முதல்வர் வருவார் என்ற நம்பிக்கையில் ஏற்பாடு செய்யப்படும் விழாக்கள் கடைசி நேரத்தில் கேன்ஸல் செய்யப்படுகின்றன. ஏன் இப்படி? எல்லா கேள்விகளுக்கும் ஒரே பதில்தான். ஜெயலலிதாவுக்கு உடல்நிலை சரியில்லை. அவருக்கு கல்லீரல் பழுது பட்டிருப்பதாக பல செய்திகள் வருகின்றன. அவரால் தொடர்ந்து 5 நிமிடங்களுக்கு மேல் ஓர் இடத்தில் நிற்க முடியாது. அதனால்தான் முதல்வர் பதவி ஏற்றுக்கொள்ளும்போது கூட அனைத்து அமைச்சர்களையும் இரு பிரிவாக பிரித்து மொத்தமாக பதவியேற்பு விழாவை நிகழ்த்தி வைத்தார். இது தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே நடக்காதது.

இப்படி ஜெயலலிதாவின் உடல்நிலை சரியில்லை என்பதை உறுதிபடுத்தும் எத்தனையோ சான்றுகள் வந்தவண்ணம் இருக்கின்றன. உச்சகட்டமாக, பாரதிய ஜனதா கட்சியின் மூத்தத் தலைவர்களில் ஒருவரான சுப்ரமணியம் சுவாமி, 'ஜெயலலிதா விரைவில் அமெரிக்கா சென்று கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்துகொள்ள இருக்கிறார்' என்று ட்விட்டரில் தெரிவித்து, இதை கிட்டத்தட்ட உறுதியேபடுத்தினார். பல அதிகாரப்பூர்வ தகவல்களை முதலில் கசிய விடுபவர் என்ற வகையில் சு.சுவாமியின் கருத்தை கிட்டத்தட்ட நம்பத்தகுந்ததாக எடுத்துக்கொள்ளலாம்.

'ஜெயலலிதா தன் உடல்நலத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டும். அவர் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கருத்துத் தெரிவிக்க அது பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியது. 'உடல்நிலை சரியில்லை என்பதை வைத்துக்கொண்டுஓய்வு அரசியலில் இருந்து ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்வது சரியல்ல' என்று பலரும் சொன்னார்கள். ஆனால் அப்படி சொன்ன அனைவருமே கருணாநிதியின் வயதை காரணம் காட்டி அவர் அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும் என ஒரு காலத்தில் சொன்னவர்கள்தான். இப்போது மிகப்பெரிய கேள்வி ஒன்று தொக்கி நிற்கிறது. ஒருவேளை ஜெயலலிதா தொடர்ந்து செயல் பட முடியாத நிலை ஏற்படுமானால் அதி.மு.க.வின் அடுத்த தலைமையை ஏற்பது யார்? அப்படி ஒரு ஆப்ஷனே அந்தக் கட்சியில் இல்லை. அங்கு ஜெயலலிதா மட்டுமே அனைத்துமாக இருக்கிறார். அவரைத் தாண்டி ஓர் அனுவும் அசையாது. அமைச்சர்கள் உட்பட அந்தக் கட்சியின் கடைசித் தொண்டனும் கூட ஜெயலலிதா காலில் விழும் வாய்ப்புக்காக ஏங்கிக்கிடக்கும் நிலையில், தலைமையை கைப்பற்றும்தீவிரமோ, வலிமையோ, தொண்டர்கள் ஏற்றுக் கொள்ளும்படியான அடுத்தக்கட்ட தலைமையோ யாரும் இல்லை. எனவே ஜெயலலிதாவால் செயல்பட முடியவில்லை என்றால் அடுத்தத் தலைமை யார் என்ற கேள்வி அ.தி.மு.க.வைப் பொருத்தவரை சிக்கலானது.

ஒருவேளை ஓ.பன்னீர் செல்வத்தை பலர் சொல்லக்கூடும். ஆனால் அவரை உடன் இருக்கும் அமைச்சர்களே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஒருவேளை சசிகலா உறவினர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கலாம். அதுவும் மக்கள் செல்வாக்கை பெற உதவாது. மொத்தத்தில் ஜெயலலிதாவுக்குப் பிறகு அந்தக் கட்சி சிதைத்து போகும் வாய்ப்புகளே அதிகம் தென்படுகின்றன. எனில், இதுவரை அ.தி.மு.க.வுக்கு வாக்களித்தவர்கள், பிறகு யாருக்கு வாக்களிப்பார்கள்? இது சுவாரஸ்யமான, எதிர்பார்ப்புக்குரிய கேள்விதான். ஆனால் நடைமுறை என்ன? ஒரு கட்சியின் மீது தீராத பற்றுகொண்டு, இம்மி அளவும் விலகாமல் அந்தக் கட்சிக்கு விசுவாசமாக இருந்து வாக்களித்தது எல்லாம் ஒரு காலம். அது மலையேறிவிட்டது.

இப்போது ஏதோ ஒரு எதிர்பார்ப்பில்தான் வாக்களிக்கின்றனர். மக்களைப் பொருத்தவரை ஓட்டுக்கு தரப்படும் பணம்தான் அவர்களின் அளவுகோள். கட்சி நிர்வாகிகளைப் பொருத்தவரை ஏதேனும் பதவியை அடைந்தால் நாலு காசு பார்க்கலாம். இதைத் தவிர்த்து அவர்களுகு தனிப்பட்ட கட்சிப்பற்று எதுவும் இல்லை. எனவே அ.தி.மு.க. இல்லை என்றால் அந்த நேரத்தில், எந்தக் கட்சிக்கு ஆதரவாக இருந்தால் காரியம் நடக்குமோ அந்தப் பக்கம் போய்விடுவார்கள். இதற்குப் பெயர் சந்தர்ப்பவாதம். ஆனால் இதுதானே அரசியல்? இதற்குப் பெயர்தானே அரசியல்?

# பாம்புக்கு எத்தனை கால்கள்?



சுமார் 11.3 கோடி ஆண்டுகளுக்கு முன்னதான பாம்பின் படிமங்கள் பிரேசிலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் அப்போதைய பாம்புகளுக்கு 4 கால்கள் இருந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக பல படிமங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்த படிமங்கள் அனைத்தும் பாம்பின் மூதாதையர் உயிரினங்களுடையது என்று புதிய கண்டுபிடிப்பின் படி தெரிகிறது. அவை அனைத்திலும் மிகச் சிறிய 4 கால்கள் உள்ளன.

படிமங்களின் தன்மையை ஆராய்ந்து வரும் பிரேசிலின் பாத் பல்கலைக்கழக மருத்துவர் நிக் லாங்க்ரிச், பல்லி போன்ற ஊர்வனவைகளின் பரிணாம வளர்ச்சியே பாம்பாக மாறியுள்ளது உறுதியாவதாக தெரிவித்துள்ளனர். சிறிய கால்களை கொண்டிருந்த இந்தப் பாம்புகள் கடலில் வாழ்ந்திருக்க சாத்தியமில்லை. மேலும், நடப்பதற்கும் கால்களை பயன்படுத்தவில்லை.

ஊர்ந்து செல்லும் வகை உயிரினங்களாகவே இருந்திருக்க வேண்டும். மற்ற உயிரினங்களை சாப்பிடுவதற்கு பக்க பலமாகவும், பொந்துகளை தோண்டவும் கால்களை பாம்புகளின் மூதாதையர்கள் பயன்படுத்தியிருக்கலாம் என்று லாங்க்ரிச் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானிகளின் இந்த கண்டுபிடிப்பின் மூலம், பாம்பு இனம் கடல்வாழ் உயிரினங்களிலிருந்து உருவானவை அல்ல. நிலம் சார்ந்த உயிரினங்கள் என்ற முந்தைய ஆதாரங்களுக்கு இந்த கண்டுபிடிப்பு வலு சேர்ப்பதாக ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டிருக்கும் அறிவியல் இதழ் குறிப்பிட்டுள்ளது.

## 1-ம் பக்க தொடர்ச்சி




ஏற்றுக் கொள்கின்றதென்பதை இலகுவாக நிறுவமுடியும். இதனால் உங்கள் வாசல்தேடி வரும் ஒவ்வொரு வேட்பாளரும் வைத்துள்ள தேசியம் சீனத்தயாரிப்பு தேசியமா இல்லையா என்பதை உறுதி செய்து கொள்வது வாக்காளர்களின் முதலாவது கடமை. இரண்டாவது, அந்த தேசியக்கடமையை நிறைவு செய்யும் வல்லமை அந்த வேட்பாளரிடம் அல்லது கட்சியிடம் உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். இதை வேட்பாளரின் கடந்தகால வரலாற்றை வைத்து எடைபோட முடியும். கடந்த கால வரலாறென்பது அவரது செயற்றிறன் சார்ந்தது. அவர் அப்பொழுது அந்த இயக்கத்தில் இருந்தார் என்பதல்ல.

மூன்றாவது, கடந்த காலத்தில் வேட்பாளரிற்கு கிடைத்த வாய்ப்புக்களை கணக்கிடுங்கள். ஒரு ஆட்சியில் பங்குதாரராக இருந்த சமயங்களில் எதனையும் செய்ய முடியாதவர், இனி புதிதாக வென்றுதான் சாதிக்கப் போகிறார் என்பதை நம்பாதீர்கள். நான்காவது நூதனமானது. ஈழத்தமிழர் அரசியலில் கடந்த 25 வருடங்களாக அதிகம் பட்டிமன்றத்திற்குள்ளாக்கப்பட்டது, அபிவிருத்தியா, உரிமையா? இன்னும் புரியும்படியாக சொன்னால் சோறா, சுதந்திரமா? இந்த இருதுருவ அரசியல்பார்வை சிறுபிள்ளைத்தனமானது. எந்த பயனையும் கொடுக்காதது. இரண்டிற்குமிடையிலான சமச்சீரான போக்கொன்றை தமிழர்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

ஐந்தாவது, கல்வித்தகைமையை மட்டும் முன்னிலைப்படுத்தி வருபவர்களை பாடசாலைகளிற்கு அனுப்பி வையுங்கள். வடக்கு, கிழக்கில் இன்னும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. எல்லா துறைசார்ந்தவர்களிற்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. அதற்காக கற்றவர்களை நிராகரிப்பதல்ல. கல்வித்தகைமை ஒன்றையே அரசியலின் பிரதான தகுதியாக கொள்ளும் போக்கொன்று ஈழத்தமிழர்களிடம் அதிகம் வளர்ந்து வருகிறது. இந்த ஆபத்தான போக்கு செயற்றிறன் வாய்ந்தவர்களை ஒதுக்கி, தமிழர் அரசியலை செயலற்ற, பேச்சரசியல் ஆக்கிவிடும் அபாயமுள்ளது.



நடிகை நந்திதா அறிமுகமான படம் 'அட்டகத்தி'. அந்தப் படம் இயக்குநர் பா.ரஞ்சித்துக்கு பெரிய நற்பெயரைப் பெற்றுத்தந்து இப்போது அவர் ரஜினி படம் வரை இயக்கிக்கொண்டிருக்கிறார். ஆனால் அதன் கதாநாயகி நந்திதாவுக்கு பெரிய வாய்ப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. இருப்பினும் மனம் சோர்ந்துவிடாத அவர் கதாநாயகிக்குக் குறைவான வேடம் கிடைத்தாலும் விடாமல் நடித்து வருகிறார். தனக்குக் கிடைக்கும் வாய்ப்பில் தன்னை நிரூபிக்க முயற்சித்து வருகிறார். அந்த வகையில் விஜய் நடிப்பில் பிரமாண்ட தயாரிப்பாக உருவாகிவரும் 'புலி' படத்தில் ஒரு முக்கியப் பாத்திரத்தில் நடித்திருக்கிறார் நந்திதா. "விஜய் கூட நடிக்கனும் என்பது என் வாழ்நாள் கனவு. அது நிறைவேறியதில் மிகப்பெரிய மகிழ்ச்சி" என புன்னகை மின்ன சொல்லும் நந்திதாவின் கையில் உப்புக்கருவாடு, இடம் பொருள் ஏவல், அஞ்சல என அரை டஜன் படங்கள் இருக்கின்றன. பச்சைத் தமிழச்சித் தோற்றத்தில் இருக்கும் இவருக்கு சீரான இடைவெளியில் அடுத்தடுத்த வாய்ப்புகள் வந்துகொண்டே இருக்கின்றன. வாங்க நந்திதா, வெல்க நந்திதா!



# டூரிங் டாக்கீஸ்



'மாரி' படத்தில் நடிகர் தனுஷ் சிகரெட் பிடிக்காத காட்சிகள் மிக குறைவு. வரும் காட்சிகளில் எல்லாம் வாயில் புகையுடன் தான் வருகிறார். படத்தின் மற்ற கதாபாத்திரங்களும் கூட எப்போதும் சிகரெட் பிடித்துக்கொண்டும், மது குடித்துக்கொண்டும்தான் இருக்கிறார்கள். இந்த நிலையில்தான் 'சினிமாவில் புகைப்பிடிக்கும் காட்சிகளில் கதாநாயகர்கள் நடிப்பது, அவர்களின் ரசிகர்களது மனங்களில் எதிர்மறை பாதிப்பை உருவாக்குகிறது. எனவே தனுஷ், திரைப்படங்களில் சிகரெட் பிடிக்கும் காட்சிகளில் நடிப்பதைத் தவிர்க்க வேண்டும். அவரது மாமனார் ரஜியின் வழியைப் பின்பற்ற வேண்டும்' என பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி கேட்டுக்கொண்டிருந்தார். இதைத் தொடர்ந்து நடிகர் தனுஷ், 'நிஜ வாழ்வில் நான் சிகரெட் பிடிப்பதோ, குடிப்பதோ கிடையாது. அந்த பழக்கங்கள் எனக்கு அடியோடு இல்லை. சினிமாவில் அந்த கதாபாத்திரத்துக்குத் தேவைப்பட்டதால் நடித்தேன். இனிமேல் அப்படிப்பட்ட புகைப்பிடிக்கும் காட்சிகல் இல்லாமல் பார்த்துக்கொள்கிறேன்' என்று அறிவித்திருக்கிறார். பாராட்டப்பட வேண்டிய மாற்றம்தான். இதை மற்ற நடிகர்களும் பின்பற்றினால் நல்லது.

வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடிப்பதில் எப்போதும் ஆர்வம் காட்டுபவர் நடிகை வித்யாபாலன். ஏற்கெனவே சில்க் ஸ்மிதா வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'த டர்ட்டி பிக்சர்ஸ்' படத்தில் நடித்தார். 'கஹானி' படத்தில் தீவிரவாத செயலில் ஈடுபடும் கணவனை கொலை செய்யும் பாத்திரத்தில் நடித்தார். இந்நிலையில் இப்போது இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி வேடத்தில் நடிக்கப்போவதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்திராகாந்தியின் வாழ்க்கை வரலாற்றை சினிமா படமாக எடுக்கின்றனர். இந்த படத்தை மணீஷ் குப்தா இயக்குகிறார். அவர் கூறும்போது, "படத்துக்கான கதையை வித்யாபாலனிடம் சொன்னோம். அவருக்கு பிடித்தது. ஆனாலும் இதில் நடிப்பது பற்றி இன்னும் தனது முடிவை அவர் சொல்லவில்லை" என்றார். இதுகுறித்து வித்யாபாலன் கூறும்போது, "இந்திராகாந்தி வேடத்தில் நடிக்க என்னை அணுகி பேசி உள்ளனர். நான் நடிக்கமாட்டேன் என்று மறுக்கவில்லை. ஆனாலும் அவர்களிடம் சம்பந்தப்பட்டவர்களிடம் தேவையான அனுமதியை முதலில் வாங்கி வாருங்கள், அதன்பிறகு பேசலாம்" என்றேன். எனக்கு இந்திராகாந்தி வேடத்தில் நடிக்க விருப்பம் உள்ளது" என்கிறார்.

நடிகை லட்சுமிராய்க்கு எந்த காலத்திலும் பரபரப்பான சினிமா வாய்ப்புகள் இருந்தது இல்லை. ராகவா லாரன்ஸ் முனி எடுத்தால் மட்டும் தவறாமல் அதில் இடம் பிடிப்பார். ஆனால் செய்திகளில் மட்டும் எப்போதும் பரபரப்பாக அடிபட்டபடியே இருப்பார். நடிக்கத் தெரிகிறதோ, இல்லையோ.. இந்த சாமர்த்தியம் மட்டும் அவருக்கு சற்று கூடுதலாகவே இருக்கிறது. உதாரணத்துக்கு நடிகர் விக்ரம் நடித்த தாண்டம் படத்தின் படப்பிடிப்பு லண்டனில் நடந்தது. ஹோட்டலில் விக்ரமுக்கு அடுத்து தனக்கு ரூம் போட்டுத் தரவில்லை என்ற ஒரே காரணத்துக்காக படப்பிடிப்பையே நிறுத்தும் அளவுக்குப் பிரச்னை செய்து, அதை செய்திகளில் அடிபடுமாறு பார்த்துக்கொண்டார். அமலா பால், இயக்குநர் விஜய் இருவருக்கும் இடையிலான காதல் விவகாரத்தை வேண்டும் என்றே வெளியில் கசியவிட்டவரும் லட்சுமிராய்தான். அந்த அளவுக்கு கிரிமினல்தனமான நடிகை அவர். அதனால்தான் பொலிகாளை மாதிரி ஆறு அடிக்கு வளர்ந்திருந்தாலும் தொடர்ந்து நீடித்து நிற்கிறார்.



த்ரிஷா பேட்டி என பத்திரிகைகளில் வருவது எதுவும் உண்மையில் த்ரிஷா பேட்டி அல்ல. அவரது அம்மா உமா கிருஷ்ணனின் பேட்டிதான். சினிமா பத்திரிகையாளர்கள் த்ரிஷாவின் பேட்டி வேண்டும் என போன் செய்தால், உடனே தன்னையே த்ரிஷாவாக பாவித்துக்கொண்டு பதில் சொல்லத் துவங்கிவிடுவார் உமா கிருஷ்ணன். விஷயம் புரியாத; முதல் முறை பேட்டி எடுக்கிற பத்திரிகையாளர் என்றால் சற்று குழம்பித்தான் போவார். கொஞ்சம் சுதாரித்துக்கொண்டுதான் பிறகு பேச வேண்டியிருக்கும். ஆனால் அவரோ கொஞ்சம் கூட சளைக்காமல், 'ஆக்ஸ்வலா நேத்து விக்ரம் கூட ஷூட்டிங் இருந்துச்சு. விஜய் கூட டேட்டிங் இருந்துச்சு' என பேசிக்கொண்டிருப்பார். எனினும் எப்போது கேட்டாலும் பேட்டி கிடைக்கிறது என்பதற்காக இந்த ரகசியத்தை யாரும் எழுவது இல்லை. இதற்காக த்ரிஷா பேசத் தெரியாதவர் என்று அர்த்தம் இல்லை. வேறு பல நடிகைகளை விட நன்றாகவே பேசவும், பதில் சொல்லவும் தெரிந்தவர்தான். இருந்தாலும் த்ரிஷாவின் மேனேஜராக அவரது அம்மாவே இருப்பதால், மகளை தொந்தரவு செய்ய வேண்டாமென தானே மகளாக மாறி, இளமையாக ஃபீல் செய்து பேட்டிக் கொடுப்பதில் அவருக்கு ஒரு ஆனந்தம்.



# TNA

## Tamil National Alliance

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, அதன் அங்கத்துவ கட்சிகள் சார்பில் 26.07.2015 அன்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை யாழ்ப்பாணத்தில் வைத்து வெளியீட்டது. அதில் இருந்து சில முக்கிய பகுதிகள்

### அரசியல் தீர்வு தொடர்பான நிலைப்பாடு

- புவியியல் ரீதியாகப் பிணைக்கப் பட்டுள்ளதும், தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதுமான வடக்குகிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களதும், தமிழ் பேசும் முஸ்லீம் மக்களதும் பூர்வீக வாழ்விடங்களாகும்.
- இலங்கை நாடு ஏற்றுக்கொண்டு, கைச்சாத்திட்டுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் குடியியலுரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சாசனத்திலும்,பொருளாதார,சமூகமற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பான சாசனத்திலும் அடங்கியிருக்கும் விதிகளின் பிரகாரம் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான மக்கள் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்களாவர்.
- முன்னர் இருந்தவாறு ஒன்றுபட்ட வடக்குகிழக்கு அலகைக்கொண்ட சமஷ்டிக் கட்டமைப்பிற்குள்ளே அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வடக்கு கிழக்கின் வரலாற்றுக் குடிகளான தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் மேற்கொள்ளப்படும் அனைத்து அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளினதும் நன்மைகளைப் பெற உரித்துடையவர்கள். இது வடக்குகிழக்கில் வாழும் எந்த ஒரு மக்கள் மீதும் எவ்வித முரண்பட்ட தாக்கத்தையும் ஏற்படுத்தா வண்ணம் இருத்தல் அவசியம்.
- பகிரப்பட்ட இறையாண்மையின்; அடிப்படையில் உருவாக்கப்படும் அதிகாரப்பகிர்வு ஏற்பாடானது நிலத்தின் மீதும்,தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில்;, சட்டம்ஒழுங்கு, சட்ட அமுலாக்கம் என்பவற்றின் மீதும், சமூக பொருளாதார அபிவிருத்தயின் அங்கங்களான சுகாதாரம், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி, விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி, பண்பாட்டுத்துறை, உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்து வளங்களை திரட்டிக்கொள்ளல் மற்றும் நிதி அதிகாரம் என்பவற்றின் மீதானதாகவும் இருக்க வேண்டும்.
- வடக்குகிழக்கில்வாழும்இளைஞர்களுக்கு நேரடி வெளிநாட்டு முதலீட்டின் மூலம் புதிய கைத்தொழிற் துறைகளும் வேலை வாய்ப்புக்களும் உருவாக்கப்படல் வேண்டும்
- தேசிய பல்கலைக்கழகங்களிற்கு அனுமதி பெறாதோர் தமக்கு உகந்த துறைகளில் உயர் கல்வியைத் தொடர்வதற்கு மாற்று வழிமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்

மேற்குறித்த யாவும் ஒன்றுபட்டதும் பிளவு றாததுமான இலங்கைக்குள் நிறைவேற்றப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

### பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான எமது நிலைப்பாடு

உண்மையானதும் நிலையானதுமான சமாதானத்திற்கு பொறுப்புக்கூறலும், நல்லிணக்கமும் இன்றியமையாதவை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் மார்ச் 2012, மார்ச் 2013, மார்ச் 2014 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பரிந்துரைகளதும், மார்ச் 2014 இன் தீர்மானத்தால் அங்கீகாரம் பெற்று எதிர்வரும் செப்டம்பர் மாதம் வெளியிடப்படவிருக்கும் சர்வதேச விசாரணை அறிக்கையினது பரிந்துரைகளதும் முழுமையான நடைமுறையாக்கலை நாம் வலியுறுத்துகின்றோம். உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பதிலும், அது இலங்கையில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் மற்றும் ஏனைய மக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதிலும் எமக்கு உறுதியான அர்ப்பணிப்புண்டு. உண்மை, நீதி, பரிகாரம் மற்றும் மீள்நிகழாமைக்கான உறுதி என்பன இலங்கையின் தேசியப் இனப் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படுவதற்கும்,இலங்கை வாழ் பல்வேறு மக்களுக்கிடையே நீதி, சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் தோன்றும் நிரந்தரமானதும், உண்மையானதுமான நல்லிணக்கம் நிலைப்பதற்கும் அத்தியாவசியமானவை.

### தமிழ் மக்களது உடனடிப் பிரச்சினைகள்

நாம் நீதியானதும் நிலையானதுமான அரசியல் தீர்வொன்றைக் காண தொடர்ந்து முயற்சிக்கும் அதே வேளை எமது மக்களது உடனடித் தேவைகளைச் சந்திப்பதிலும் முனைப்புடன் ஈடுபடுவோம்.



குறிப்பான சில விடயங்கள் இங்கு பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

- வடக்கிலும் கிழக்கிலும் அர்த்தமுள்ள இராணுவக் குறைப்பிற்கு ஆதாரமாக ஆயுதப்படைகள்,இராணுவச் சாதனங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்பன அகற்றப்பட வேண்டும். இது இன்று நிலவும் அமைதிச்சூழலில் இன்றியமையாததாகும்.
- வடக்கிலும் கிழக்கிலும் போரினால் இடம்பெயர்ந்த மக்கள் விரைவாகத் தமது சொந்த இடங்களில்; மீளக் குடியேற்றப்பட வேண்டும். இவர்களுக்கான வீடுகளும், வாழ்வாதரங்களும் இவர்களது கௌரவம் குன்றா வண்ணம் மீளமைக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரது அயராத உழைப்பின் விளைவாக ஜனவரி மாதம் 2015 இல் முன்னைய அரசு தோற்கடிக்கப்பட்டதன் பின்பு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தினால் வடக்கில் வலிகாமத்திலிருந்தும், கிழக்கில் சம்பூரிலிருந்தும் வெளியேற்றப்பட்ட மக்களுக்கு அவர்களது காணிகளை மீளக் கையளிப்பதற்கும், அவர்களை மீளக் குடியமர்த்துவதற்குமான தீர்மானம் எடுக்கப்பட்டு, இன்று அது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தக் விடயங்கள் முற்றாக நிறைவேறும் வரை எமது முயற்சிகள் தொடரும். மேலும், எமது முயற்சியால் முல்லைத்தீவு கேப்பாபிலவில் ஆயிரம் ஏக்கர் நெற்காணி அவற்றிற்கு உரித்தான மக்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- யுத்தம் நிறைவடைந்து ஆறு வருடங்கள் கடந்துவிட்டதனால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில்வைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளும், போருடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுக்களின் பெயரில் சிறையிலிருக்கும் மற்றைய கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.
- உண்மையைக் கண்டறிவதனூடாக இன்று வரை நீடிக்கும் காணாமற்போனோர் விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். தமது வாழ்வாதாரமாக இருந்த குடும்பத்தலைவர்களையும் பிள்ளை களையும் இழந்த காணாமற்போனோர் குடும்பங்கள் துயரங்களைக் கையாளவும், அவர்களை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்வதற்குமான பன்முகப்படுத் தப்பட்ட விமோசனத் திட்டங்கள் அவர்களுக்குக் கிட்ட வேண்டும்.
- வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழர்கள் தமதுவாழ்விடங்களுக்குத்திரும்ப அனுமதி வழங்கப்படுவதோடு, திரும்பத்தக்கதான சூழலும் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக தென்னிந்தியாவில் இருக்கும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான அகதிகளின் மீள்வருகைக்கும், மீள்குடியேற்றத்திற்குமான திட்டங்கள் விரைவாக முன்னெடுக்கப்படல் வேண்டும்.
- இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்குதல் அடங்கலாக வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்கான விரிவானதொரு நிகழ்ச்சித் திட்டம் இலங்கை அரசாங்கத்தினதும், புலம்பெயர் தமிழர்களதும், சர்வதேச சமூகத்தினதும் முனைப்பான ஆதரவுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த அரசின் எதிர்மனப்பாங்கும், ஜனவரித் தேர்தலின் பின்னரான அரசின் உறுதிப்பாடற்ற யதார்த்தமும் இதுவரை மேற்குறிப்பிட்ட திட்டங்களை நடை முறைப்படுத்துவதற்கான அவகாசத்தை வழங்கவில்லை. இப் பொதுத் தேர்தலின் பின்னர் உருவாகும் அரசின் கீழ் இந் நிகழ்ச்சி நிரல் நடைமுறைப்படுத்தப்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அயராது உழைக்கும்.
- எமது மக்களின் விவசாயத்திற்கு அவசியமான நீர்த் தேவை மற்றும் குடிநீர்த் தேவை என்பவற்றைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் வடக்குகிழக்கில் உள்ள அனைத்து சிறு குளங்களையும் புனர் நிர்மானம் செய்யும் திட்டத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கும். மேலும் வடக்கில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையினைத் தீர்க்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்ற வல்லுனர்களின் உதவியுடன் ஆவன செய்யும்.
- பலாலி விமானத்துறையை சர்வதேச விமான நிலையமாக மாற்றுதல், வடக்கு கிழக்கில்; உள்ள துறைமுகங்களையும் மற்றும் மீன்பிடித்துறைமுகங்களையும்; அபிவிருத்தி செய்தல் என்பன உள்ளடங்கலான பாரிய அபிவிருத்தி திட்டங்கள் வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும்
- எமது பனைவளத்தை நவீன முறையில் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவி பெறப்படும்.
- எமது மீனவர்கள் தமது தொழிலில் சுயாதீனமாக ஈடுபடுவதில் எதிர்நோக்கும் சவால்களுக்கு தீர்வுகள் காணப்படு வதுடன் அவர்களது வாழ்வாதார மேம்பாட்டுக்கான பொருத்தமான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படும்

### போரினால் விதவையாக்கப்பட்டோர் அநாதைக் குழந்தைகள், முதியோர்கள் மற்றும் அங்கவீனர்கள்

வடக்கு கிழக்கில் ஆதரவின்றியிருக்கும் 90,000 இற்கும் அதிகமான விதவைகள் போர் விட்டுச் சென்ற ஆழ்ந்த வடுக்களாய் வாடுகின்றனர். அவர்களது ஆளுமையினை விருத்தி செய்து அவர்களது வாழ்க்கையினை மேம்படுத்த தெளிவானதொரு திட்டம் அவசியம். எம் விதவைகள் இன்று பொரு ளாதார ரீதியிலும், சமூக ரீதியிலும் பலத்த இன்னல்களிற்கு முகம் கொடுக்கின்றனர். இவர்களது வாழ்வாதாரத் தேவைகளை சீர்செய்யும் திட்டங்களை விரைந்து நடை முறைப்படுத்தி இவர்களது இக்கட்டான சூழ்நிலையிலிருந்து இவர்கள் விடுவிக்கப் படுவது அவசியம். குழந்தைகள், முதியோர் மற்றும் ஊனமுற்றோரதும் தேவைகளும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

### முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு

முன்னாள் போராளிகளிக்கு வழங்கப்படும் புனர்வாழ்வுத் திட்டங்கள் அவர்கள் தமது வாழ்க்கையை சுயகௌரவத்துடன் மீள ஆரம்பிக்கத்தக்க தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் என்பன அடங்கிய பூரணத்துவமிக்க திட்டங்களாக இருக்க வேண்டும். இவ்விடயம் தொடர்பில் இதுவரை நடைமுறையில் உள்ள திட்டங்கள் தம்மகத்தே பல்வேறு குறைபாடுகளைக் கொண்டிருக்கின்றன. போராளிகளால் தமது வாழ்க்கையை மீண்டும் தொடங்கவோ, வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்ளவோ முடியாத நிலையே தொடர்வதால், இது குறித்த உடனடி வேலைத்திட்டம் அவசியம்.

## இணைய ஜன்னல்

**JEya RAjh/Facebook:**
வன்னியில் 500 மில்லிலீற்றர் தண்ணீர் பஸ்ஸில் 50 ரூபா. கொக்கோகோலாவும் 500 மில்லிலீற்றர் 50 ரூபா தான்.குருணாகல்லிலிருந்து வரும் இளநீர் 80 ரூபா. ஒரு போத்தல் கள்ளின் விலை 60 ரூபா. பசுப்பால் 60 ருபா.வன்னியில் இப்ப தாய் பாலை தவிர எல்லாமே காசுதான்.2002 ஆம் ஆண்டுக்கு முதல் கொக்கோகோலா வன்னியில் அறிமுகமானது. அதுக்கு முதல் தண்ணீர், இளநீர், பசுப்பால், கள், தாய் பால் எல்லாமே ப்ரீயா கிடைச்சது. ரணில் வாழ்க.

**Con Gainer/twitter.com**
பரபரப்பான காலை வேளையில் மியூசிக் சேனலுக்கு போன் செய்து தொகுப்பாளினியிடம் சிரித்துப்பேசுமளவிற்கு நிம்மதியான ஒரு வாழ்க்கை வாய்க்கவேண்டும்

**Lekha/twitter.com**
ஆபாச வரிகளை பிஞ்சுக் குரல்களில் கேட்டு ஆர்ப்பரிக்கும்சமூகம் உருப்படாது..#SuperSingers

**Arul Ezhilan/Facebook**
மோடிவந்தா செஞ் சிருவாண்ணாங்க..... முருகன், சாந்தன், பேரறிவாளன் விடுதலைக்கு மோடி அரசு கடும் எதிர்ப்பு...தோ செஞ் சிட்டாப்ல!

**கலைலலிதா/twitter.com**
அட என்ன ஆச்சரியம் இந்த சாதிக்கரன் அந்த சாதிக்காரிய கல்யாணம் பண்ணினாக்கூட குழந்தை பிறக்குது?!

**சௌம்யா/twitter.com**
கட்டெறும்பெல்லாம் பாய்ஸ், சுள்ளெறும்பெல்லாம் கேர்ள்ஸ் னு நினைச்சிட்டிருந்தேன் சின்னப்புள்ளைல

**சௌம்யா/twitter.com**
அடிகளை விட திட்டுகள் வலிக்கத் துவங்கிய நாளில் பெரியவர்களாகிப் போனோம்


**யாதுமாகி/twitter.com**
சூரியன் 6மணிக்கெல்லாம் வருது இன்னும் தூங்குறியே சோம்பேறினு திட்றாங்களே சூரியன் சாயங்காலம் 6மணிக்கே தூங்கபோயிடுதே நாம போனா சும்மாஇருப்பாங்களா

**ஸ்டாரன்/twitter.com**
"நேத்து கூட ஃபேஸ்புக்ல ஸ்டேட்டஸ்லாம் போட்டு இருந்தாரே" சாவு வீட்ல கூட இப்டிதான் பேசுற காலம் வந்துடும்!

**Naveen Kumar/twitter.com**
நல்லவேலை ஏவாள் தமிழ்ப்பெண் இல்லை. ஆதாமிடம் 'நீ அக்கா தங்கையுடன் பிறக்கவில்லையா?' எனக் கேட்டு மனித குலத்தையே முடிவிற்குக் கொண்டுவந்திருப்பாள்

### உடல்நலத்துக்கு கேடு விளைவிக்கும்

# சீன பிளாஸ்டிக் அரிசி... ஒரு அதிர்ச்சி ரிப்போர்ட்!




பிளாஸ்டிக் அரிசி.. என்ற வார்த்தையைக் கேட்டதுமே கடும் அதிர்ச்சி ஏற்படுகிறது இல்லையா? ஆனால் அந்த கொடும் காலம் வந்தேவிட்டது. சமீப காலமாக இந்தியாவில் பிளாஸ்டிக் அரிசி குறித்த செய்திகள் அடிபடுகின்றன. எது பிளாஸ்டிக் அரிசி?

உண்மையில் பிளாஸ்டிக் அரிசி என்பது பிளாஸ்டிக்கில் செய்யப்படுவதில்லை. உருளைக்கிழங்கு மற்றும் சர்க்கரைவள்ளிக் கிழங்குடன் செயற்கைப் பிசினைக் கலந்து, பிளாஸ்டிக் அரிசி செய்யப் படுவதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே தங்கள் நாட்டு உயர்தர அரிசி வகையிலேயே போலியைத் தயாரித்து விற்பனை செய்த சீனா, தற்போது முழுக்க முழுக்க செயற்கை அரிசியைத் தயாரிக்க ஆரம்பித்துவிட்டது.

சீனாவின் ஷாங்ஷி பகுதியில் பிளாஸ்டிக் அரிசி தயாரிக் கப்படுவதாகக் கொரிய மற்றும் மலேசியச் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பகுதிகளுக்குள் அயல் நாட்டினர் அனுமதிக்கப்படுவதில்லை என்பது சந்தேகத்தை வலுக்கச் செய்திருக் கிறது. அரிசியை ஆதார உணவாகக் கொண்டிருக்கும் நாடுகளான இந்தியா, இந்தோனேசியா, வியட்நாம், சிங்கப்பூர் போன்ற நாடுகள்தான், இந்தப் பிளாஸ்டிக் அரிசியின் இலக்கு. அதுவும் கிராமப்புற மக்களை அதிகம் கொண்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முக்கியத்துவம் தரப்படுகிறது. சரி, இதுதான் பிளாஸ்டிக் அரிசியா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?

பிளாஸ்டிக் அரிசி தனியாக விற்பனை செய்யப்படுவதில்லை. இவை அரிசியுடன் கலக்கப்பட்டே விற்பனைக்கு வருகின்றன. தவிர, சமைத்தால் மட்டுமே அரிசியில் பிளாஸ்டிக் அரிசி கலப்படம் செய் யப்பட்டிருப்பதைக் கண்டுபிடிக்க முடியும். சமைத்த பிறகு பிளாஸ்டிக் அரிசிமுழுவதும்வேகாமல்முரட்டுத் தன்மையுடன் இருக்கும்.பொதுவாக அரிசியை வேகவைத்தால் அதிலிருக்கும் ஸ்டார்ச், மேலே படலமாகப் படியும். பிளாஸ்டிக் அரிசி வேகும்போது கண்ணாடி போன்ற படலம் வரும். இதை வெயிலில் காயவைத்தால் மெல்லிய பிளாஸ்டிக் ஷீட் போல மாறிவிடும். பிளாஸ்டிக் அரிசியை நெருப்பில் காட்டினால் சர்க்கரைவள்ளிக் கிழங்கின் மணம் வெளிப்படும். சர்க்கரையில் கலந்திருக்கும் ரவையையும், மிளகுடன் கலக்கப்பட்டிருக்கும் பப்பாளி விதையையும் நம்மால் கண்டு பிடித்துவிடுகிற மாதிரி பிளாஸ்டிக் அரிசியை எளிதில் அடையாளம் காணமுடியாது. இதற்கென இருக்கும் ஆய்வகங்களின் துணையோடு மட்டுமே இந்த ரசாயன அரிசியை, திட்டவட்டமாக இனம் காண முடியும்.

# திருடுப்போகும் சீனப் பெருஞ்சுவரின் செங்கற்கள்!



சீனப் பெருஞ்சுவரில் சுமார் 30 சதவீதம் சேதமடைந்துவிட்டதாகவும், அக்கறையின்றி செங்கற்களை மக்கள் திருடுவதும் இயற்கை மாற்றமுமே இதற்கு காரணம் என்று பெய்ஜிங் டைம்ஸ் ஆய்வில் தெரிவித்துள்ளது.

யுனெஸ்கோவால் உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட சீனப் பெருஞ்சுவர் எவ்வித இடைவெளியும் இன்றி ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் நீளம் கொண்டது. சான்காய்குவானில் இருந்து ஜியாயூகுவான் கோபி பாலைவனம் வரை இந்தச் சுவர் நீண்ட நெடிய தூரம் கொண்ட இது முற்றிலும் மனிதர்களின் உழைப்பால் ஆனது. கி.மு. 3ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட சீனப்பெருஞ்சுவரின் கட்டுமான பணிகளில் சுமார் 6,300 கிலோ மீட்டர்கள் 1368 முதல் 1644 காலகட்டத்தில் மிங் வம்சத்தினரால் கட்டப்பட்டது. இதில், 1,962 கிலோ மீட்டர்கள் நீளம் உள்ள இச்சுவரானது பல வருடங்கள் ஆகிவிட்டதாலும், காற்று, மழை போன்ற இயற்கை மாற்றங்களாலும் சேதமடைந்து சிதைந்தது கடந்த 2014ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்தது.

இந்த நிலையில் பெய்ஜிங் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள ஆய்வுக் கட்டுரையில், "சுற்றுலா மற்றும் உள்ளூர்வாசிகளின் செயல்பாடுகளால் சீனப் பெருஞ்சுவர் பாதிக்கப்பட்டு பெருமளவில் அழிந்துவிட்டது. பழங்கால கற்கள் மற்றும் செங்கற்களால் ஆன கோபுரங்கள் ஒரு மழைக்கு கூட தாங்காத நிலையிலேயே உள்ளது.

வடக்கு மாகாணமான லுலாங்கில் வாழும் மக்கள், வீடு கட்டுவதற்காக சுவரிலிருந்து கற்களை திருடிச் செல்கின்றனர். சீன எழுத்துக்குறிகள் இருக்கும் கற்களை சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்கள் உள்நாட்டு மதிப்பில் 30 யுனான்களுக்கு விற்பனை செய்கின்றனர். செங்கற்களை திருடுவோருக்கு அங்கு 5 ஆயிரம் யுவான் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

சமீப காலமாக இங்கு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகிறது. அவர்களும் அக்கறையின்றி செயல்படுகின்றனர். மேலும் மழை, உப்புக் காற்று போன்ற பல இயற்கை மாற்றங்களால் பாதிப்புகள் ஏற்படுகிறது" என்று பெய்ஜிங் டைம்ஸ் பத்திரிகையின் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நவீன உலகத்திற்கேற்ப நவீன முறையில் வடிமைக்கப்பட்ட
இலத்திரனியல் பொருட்கள் மற்றும் தளபாட பொருட்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள

கிரி எலக்ரோனிக் சூப்பர் மார்க்கெட்
Giri Electronic Super Market

286 கண்டி வீதி, வவுனியா
0094 (0)776143500
0094 (0) 245671354



விசேட சலுகைகள்
- பண்டிகைக்கால பரிசு மழை
- இலகு தவணைக் கொடுப்பனவு
- சம்பத் வங்கியின் VISA, Master ஆகியவற்றினை கொண்டு 6 மாதங்கள், 12 மாதங்கள், 18 மாதங்கள், 24 மாதங்கள் வட்டியில்லாத கடன்களை பயன்படுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

# யாழ்ப்பாண பெண்களின் ஆடை இரகசியங்கள்



ஆள் பாதி, ஆடை பாதி என்பார்கள். ஒருவரின் அழகையும், ஆளுமையையும் எடுத்துக்காட்டுவதில் ஆடைகளின் பங்கு அப்படி. ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக ஆடைகளும் இருந்தன. அதனால்தான் ஆடைகளை மையப்படுத்தி ஒழுக்கம் சார்ந்த பார்வைகள் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டன.

ஆனால் பாருங்கள் இப்போதைய நிலையை.. ஆள்பாதி, ஆடைபாதி என்ற நிலை மாறி, அந்த பாதி ஆடையும், கிழிசல் பாதி.. ஸ்டைல் பாதி என மாறிவிட்டது. ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கும் இது பொருந்தும். உலகளாவிய 'ரென்ட்' இது. உலக ஓட்டத்தில் தமிழர்கள் மட்டும் தனித்து நிற்க முடியுமா? உலகப்போக்கில் ஒத்து ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக பெண்களின் உடைப் பாணிகள் மாறி வரும் வேகமிருக்கிறதே... உசைன் போல்ட்டின் வேகத்தை மிஞ்





சியது. 'என்னப்பாஞ் நேற்றுத்தான் தாவணி போட்டவளொருத்திக்கு காதல் கடிதம் கொடுத்தேன்.இன்று,தாவணி உடுத்துபவர்கள் யாரையுமே காண முடிதில்லை' என இளசுகள் பெருமூச்சு விடுகிறார்கள். அந்தளவு விரைவாக பெண்களின் உடைப்பாணிகள் மாறி வருகின்றன.

இன்று உலகத்திற்கும் வடக்கிற்கும் எந்த தடைகளுமில்லை. கதவுகளில்லாத பாதை இரண்டு தரப்பிற்கும். இதனால் உலகளாவிய ஆடைமாற்றங்கள் இங்கும் எதிரொலிக்கிறது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில்த்தான் அதிகம். யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு நான்கு குடும்பத்திற்கு ஒருவர் ஐரோப்பா, அவுஸ்திரேலியா,அமெரிக்காவில்இருக்கிறார். இந்த உறவுப்பாலத்தின் ஊடாக விரைவாக புதிய பாஷன்கள் விரைவாக பழக்கத்திற்கு வந்துவிடுகிறது. இதனால் மற்ற இடப் பெண்களிற்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் போன்ற பெருநகரப் பெண்களிற்குமிடையில் நூதனமான ஒரு வித்தியாசம் தெரியத்தான் செய்கிறது.

தினமும் புதிதுபுதிதாக உடுத்தி தங்களை அழகுபடுத்தி காட்டுவதையே பெண்கள் விரும்புவார்கள். பெண்களின் இந்த மனநிலைக்கு தீனிபோடுபவர்களாக ஆடை உற்பத்தியாளர்கள் மாறிவிட்டனர். தினம் தினம் சந்தைக்கு புதிய வடிவமைப்புக்களில் ஆடைகள் வந்து கொண்டிருக்கின்றன.

இந்த ஸ்டைல் காலத்தில் இன்று நமது பெண்கள் எந்தெந்த ஆடைகளை விரும்பி அணிகிறார்கள், அந்த ஆடை அணியும் பெண்களின் மனநிலை எப்படியிருக்கும் என்று பார்க்கலாம்.

### சிக்கன பாவாடை

என்னதான் ஆடை வந்தாலும், அனைத்தும் அரைப்பாவடை சட்டையை அடிப்படையாக வைத்துதான் வடிவங்களை மாற்றுகிறார்கள். ஏனென்றால், இன்றும் நமது பெண்கள் கண்ணை மூடிக்கொண்டு முதலாவது தெரிவாக இதைத்தான் எடுக்கிறார்கள். (என்ன... அதன் அளவுதான் வித்தியாசப்படுகிறது). பெரும்பாலான தமிழ்பெண்கள் அரைப்பாவாடை, ரீசேட் அல்லது சட்டைதான் அணிகிறார்கள்.

தொந்திவரை பட்டனை கழற்றிவிட்டு, தொடைக்குமேலாக சாரத்தை உயர்த்தி கட்டி காற்றோட்டமாக ஆண்கள் திரிந்து கொண்டு, நம்மை மட்டும் இந்த வேகாத வெயிலில் இழுத்துப் போர்த்திக் கொண்டு திரியச் சொல்வது என்ன நியாயம் என பெண்கள் கேட்கும் 'காலநிலைக்கேற்ற' ஆடைதான் இது. அணிவதற்கும் பராமரிப்பதற்கும் இலகு என்பது கூடுதல் ப்ளஸ். விலையும் கைக்கடக்கமானது. (கைக்கடங்காத விலையுடைய பட்டுச்சேலை எல்லாம் அவர்கள் காதலன் அல்லது கணவன் வாங்கிக் கொடுத்தால்தான் அணிவார்களாம் என்பது வேறுகதை).

இந்த அடை அணியும் பெண்கள் பெரும்பாலும் கொஞ்சம் ஸ்ரைல் விரும்பிகளாக இருப்பார்களாம். நாகரிக மாற்றங்களிற்கு முதலில் உட்பட்டு விடுவார்களாம். அதிகம் செலவு செய்து தொளதொளா உடைகளை எதற்கு வாங்க வேண்டுமென்ற 'சிக்கன' பேர்வழிகள்.

> **ஜீன்ஸ் அணிந்தால் எங்கிருந்து வருகின்றதென்றே தெரியாமல் ஒரு தற்துணிவு பெண்களிடம் ஏற்படுகிறதாம். எந்த காரியத்தையும் முன்னின்று செய்யும் தற்துணிவும் ஏற்படுகிறதாம்.**

### சரியாத சல்வார் மவுசு

என்னதான் விதம்விதமான ஆடைகள் வந்தாலும் நமது பெண்களின் இதயம் கவர்ந்த ஆடை இதுதான். பெண்களிடம் தங்க அணிநகைகள் உள்ளதைப் போல, சகல பெண்களிடமும் சில வெரைட்டியான சல்வார் இருக்கும்.

முன்னர்தான் பெண்களின் அடையாளம் என்றதும் சேலை நினைவிற்கு வரும். இப்பொழுது சேலையின் இடத்தை சல்வார் கைப்பற்றி விட்டது. ஆடையுலகின் போட்டிக்கேற்ப சல்வாரிலும் விதவிமான டிசைன்கள் தினம்தினம் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன.

'நாங்கள் மிக அடக்கமாக பிள்ளையை வளர்க்கிறோம்' என கூறிக்கொள்ளும் பெற்றோர்கள் இந்த ஆடையைத்தான் அதிகம் வாங்கிக் கொடுக்கிறார்கள். இதனாலேயே இந்த ஆடையை அணியும் பெண்களிடமும் ஒரு அடக்கமும், பவ்வியமும் தொற்றிக் கொண்டு விடுகிறதென்றார்கள் தினம்தினம் பின்னால் திரியும் இளசுகள்.

சல்வார் அணியும் பெண்கள், 'ஊர் என்ன நினைக்குமோ' ரகம் என்கிறார்கள். தமிழ் சினிமாவில் காட்டும் கதாநாயகிகளை போன்றவர்களாக இருப்பார்களாம். இதனைவிட மிக முக்கியமான காரணம் ஒன்றிற்காகவும் பெண்கள் சல்வார் அணிகிறார்களாம். ஆண்களிற்கு பிடிக்குமே என்பதற்காக. அட.. அப்படியா என ஆண்கள் பக்கத்தில் விசாரித்தால், சல்வார் அணியும் பெண்களைத்தான் அதிகம் பிடிக்கும் என்கிறார்கள். சல்வார் அணியும் பெண்களிடம் அப்படியும் ஒரு நோக்கமா!

### விஜயசாந்தி ஆக்கும் ஜீன்ஸ்

முன்னர்தான் ஜீன்ஸ் அணிந்தால் ஐ.எஸ் தீவிரவாதிகளை பார்ப்பதை போல பார்த்தார்கள். இப்பொழுது அது சகஜமாகிவிட்டது. நகரில், பேருந்துகளில் சர்வசாதாரணமாக ஜீன்ஸ், ரொப் அணிந்த பெண்களை காண முடிகிறது. இதுவும் பெண்கள் சாதாரணமாக அணியும் ஆடைகளில் ஒன்றாகிவிட்டது.

இந்த ஆடையிலுள்ள இரண்டு சிறப்பை சொல்கிறார்கள். முதலாவது எல்லா ஆடைகளையும் விட பெண்களிற்கு பாதுகாப்பானது. எந்த சந்தர்ப்பத்திலும் அணியத்தக்கது. மற்றது, இலங்கை போன்ற பல் கலாசார நாடுகளிற்கு உகந்தது. சல்வார் அணிந்து கொண்டு ஹம்பாந்தோட்டை சென்றால், இந்த தேர்தல் சமயத்தில் 'லேடி ரினன்ஏ' என கலாய்த்து விடவும் சந்தர்ப்பமுண்டு. ஆனால் ஜீன்ஸ்,ரொப் போன்ற பொதுவான ஆடைகளை அணிந்து கொண்டால் ஒரு 'குளேபல் லுக்' கிடைக்கிறதென்கிறார்கள்.

ஆனால் இந்த ஆடையிலுள்ள பெரிய சிக்கலே இதன் விலைதான். ஆனாலும் தற்போது நாடு கெட்டுள்ள நிலையில் விலையையா பார்க்க முடியும்.. பாதுகாப்பைத்தானே பார்க்க வேண்டும் என்கிறார்கள் பெண்கள்.

ஜீன்ஸ் அணிந்தால் எங்கிருந்து வருகின்றதென்றே தெரியாமல் ஒரு தற்துணிவு பெண்களிடம் ஏற்படுகிறதாம். எந்த காரியத்தையும் முன்னின்று செய்யும் தற்துணிவும் ஏற்படுகிறதாம். சல்வார் அணிந்து செல்லும் பெண்களை யாராவது கிண்டலடித்தால் தலையை குனிந்து கொண்டு தான் செல்லச் சொல்லும்.. அதுவே ஜீன்ஸ் அணிந்தவர்களிடம் எடுபடாது. காலிலுள் ளதை கழற்றிக்காட்டச் சொல்லுமாம்!

### சேலை கட்டும் பெண்ணுக்கொரு வாசமுண்டு

பெண்கலௌன்றால் அது சேலைதான் என்பதுதான் இன்னுமிருக்கும் சம்பிரதாயம். அன்றாட வாழ்வில் பல்வேறு ஆடைகளை பாவித்தாலும், பெண்கள் தங்கள் வாழ்வில் மறக்க முடியாத ஒவ்வொரு அத்தியாத்தையும் சேலையுடுத்தியே கடக்கிறார்கள். பூப்புனித நீராட்டுவிழா, திருமணம், பிறந்தநாள் என அது நீளமான பட்டியல்.

ஆனாலும்இதன் விலையும்,அணிவதற்கும், பராமரிப்பதற்கும் உள்ள சிரமமும், பெண்களின் இயல்பான செயற்பாடுகளிற்கு வசதியற்ற தன்மையும்தான் பெரிய பலவீனங்கள். அதனால் பெண்களின் சம்பிரதாய ஆடையென்ற நிலையில் உள்ளது.

அதுதவிர, தினமும் சேலைகட்டிய பெண்களை பார்க்கிறோம். அவர்கள் பெரும் பாலும் அரச ஊழியர்கள். அணிந்துதான் தீர வேண்டும். சேலையணிந்தாலே ஒரு பெரிய பெண் மனநிலை ஏற்பட்டு விடுகிறதாம். மற்றவர்களிற்கு ஆலோசனை சொல்லி, முதிர்ச்சியான மனநிலையில் நடக்கத் தோன்றுமாம்.

**- சியா**


தாயகம் மெடிகல் கிளினிக்

அனைத்துவித குடும்ப மருத்துவ பரிசோதனைகளுக்கும், சிகிச்சைகளுக்கும்

கோண்டாவில் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

திறக்கும் நேரம்

திங்கள் முதல் ஞாயிறு வரை

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை.

தொலைபேசி: 0212053800

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

## இணைய ஜன்னல்

**Gowripal Sathiri Sri/Facebook:**
புங்குடுதீவு மாணவி வித்யா படுகொலை: வழக்கு போகிற போக்கும் அதன் பின்னலான அரசியல் நகர்வுகளையும் பார்க்கும்போது வித்யா தானாகவே தற்கொலை செய்துகொண்டார் என்று தீர்ப்பு வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

**Rimaz Ahamed/Facebook**
''ஒருதடவையேனும் Srilankan Airlines இல் பறந்தவனுக்குத்தான் தெரியும், இந்தியாவிலிருந்து பெண்ணை கடத்திய ராவணன் பக்க நியாயம்!

**Yogoo Arunakiri/Twitter.com**
எப்பப் பாரு, தமிழ்த் தேசியம், மண் பற்று, உணர்வு, சாதி ஒழிப்பு, பகுத்தறிவு என்று மிக பெரிய போராளிகள் போல ஃபேஸ்புக்கில் வேஷம் போட்டுத் திரிவது. ஆனால் கூட்டு வைத்து இருக்கிறவன் பூரா அயோக்கிய பயலுகள் கூட...

**மயூரப்பிரியன் mayurapriyan/twitter.com**
கிளிநொச்சியில் மீட்கப்பட்ட சடலம் காணாமல் போன சிறுமியினுடையதா? அப்ப கடோறி தான் அடிச்சதா? விசாரணைகள் ஆரம்பம்.

**Ashroff Shihabdeen/twitter.com**
முன்னாள் மன்னர் மீண்டும் அதிகாரம் பெற்று விடுவார் என்ற பதட்டம். தராவீஹ் தொழச் சென்றவர்களுக்கு வாள் வெட்டு என்று ஒரு பக்கம் அதகளப்பட்டுக் கொண்டிருக்கையில்... தேசியத்தலைவர் ஹக்கீமா ரிஸாதா என்று ஒரு குரூப்பு பட்டி மன்றம் நடத்திக் கிட்டிருக்கு... # முடியல்லடா!

**Suratha yarlvanan/ Facebook.com**
வடகிழக்கில தமிழ்மக்கள் சரியாக தனித்த ஒரேயொரு அரசியல்கட்சியாக இயங்க முடியாமைக்கு இன்னொரு காரணம் உணர்வுகளை உசுப்பிவிடக்கூடிய சரியான மேடைப்பேச்சாளர் இல்லாததுதான் #வண்ணை ஆனந்தன் #சீமான்# வெற்றிடம்

**பிறஸ்னோவ்/Facebook.com**
சுதந்திரத்திற்கு முன்னாடி படிக்காதவர்கள் அடிமையாக இருந்தார்கள். சுதந்திரத்தின் பின்னர் படித்தவர்கள் அடிமையாக உள்ளனர்.

**Doha Talkies @dohatalkies/twitter.com**
கடவுள் இல்லை என்பான் யாரடா? தில்லை கண்டு பாரடா!
தண்டபாணி தேசிகர்
இல்லை என்பேன் நானடா
அத்தில்லை கண்டு தானடா!
பாவலன் பாரதிதாசன்.

**பாரதி @barathi/twitter.com**
யோசிக்காம செஞ்சிட்டு ரொம்ப வருத்தப்படறதில் முதல் இடம்குழந்தைகளை திட்டுவது/அடிப்பது! சமாதானப்படுத்தறக்குள்ள உயிர் போகுது!





# வலிகாமம் மீள்குடியேற்றத்திற்கு தடையாக இருப்பது யார்?

வலிகாமம் மக்களின் மீள்குடியேற்றம் என்பது கனவாகவே போய் விடுமோ என்பதுதான் இப்பொழுது எழுந்துள்ள மிகப்பெரிய அச்சமூட்டும் கேள்வியாக உள்ளது. புதிய அரசு பதவியேற்றதும் எழுந்த நம்பிக்கை அப்படியே கருகிவிட்டது. அரசு வாக்குறுதியளித்ததை போல மீள்குடியேற்றமும் நடக்கவில்லை. என்றாவது ஒருநாள் சொந்த இடத்திற்கு சென்றுவிடலாம் என 25 வருடமாக உயிரைப்பிடித்துக் கொண்டு வாழ்ந்த மக்கள் மீண்டுமொரு ஏமாற்றப்பட்டுள்ளனர்.

வலிகாமம் வடக்கு, கிழக்கில் பலாலி மற்றும் காங்கேசன்துறையை மையப்படுத்தியதாக விரிந்துள்ள பெரிய இராணுவ வலயத்தில் சிக்கியிருப்பது யாழ்ப்பாணத்தின் இதயம். விவசாயம் செழித்திருந்த பூமி. செம்மண்ணில் நீரிறைத்து பொன்னள்ளி வந்தார்கள். இப்பொழுது அந்த நிலம் முழுவதும் இராணுவத்தின் முகாம்களும், விவசாயப்பண்ணைகளும், சொகுசு விடுதிகளும் அமைக்கப் பட்டுள்ளன.

கடந்த மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் மீள்குடியேற்றம் என்ற பேச்சையே யாரும் உச்சரிக்க முடியாத நிலை காணப்பட்டது. அதற்காக போராட்டங்களையும் நடத்த முடியாத நிலை காணப் பட்டது. மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி போராட்டம் நடத்த எத்தனிக்கப்பட்ட சமயங்களிலெல்லாம் அச்சுறுத்தப்பட்டு போராட் டங்கள் முடக்கப்பட்டன. அச்சுறுத்தலை மீறி மக்கள் தயாரானபோது, பயணம் செய்யும் வாகனங்களின் உரிமையாளர்கள் அச்சுறுத்தப்பட்டு தடையேற்படுத்தினார்கள். வாகனங்களின் ரயர்களில் ஆணிகள் ஏற்றினார்கள்.

ஜனவரி 8-ம் திகதி நாட்டில் புதிய ஆட்சியேற்பட்டதுடன், மக்கள் ஆசுவாசப்பெருமூச்சுவிட முடிந்தது. புதிய ஆட்சியில் வழங்கப்பட்ட பல்வேறு வாக்குறுதிகளில் ஒன்றாக இருந்தது உயர்பாதுகாப்பு வலயங்களை விடுவிப்பது.

மகிந்த ஆட்சியிலிருந்து விரட்டப் பட்ட சமயத்தில் வலிகாமத்தில் மட்டும் மொத்தம் 6,381 ஏக்கர் நிலம் இராணுவத்தின் பிடியிலிருந்தது. ஜனாதிபதி தேர்தல் சமயத்திலேயே ரணில், மைத்திரி கூட்டு தமிழ் மக்களிடம் வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்று உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீள்குடியேற்றுவது என்பது. புதிய ஆட்சி பதவியேற்றதும் வலிகாமத்தில் 1,000 ஏக்கர் சிலங்களை விடுவிப்பதாக அறிவித்து, செயற்படுத்தியும் காட்டியது. 25 வருடங்களின் பின்னர் அந்த மக்கள் தமது நிலங்களிற்கு சென்ற காட்சிகள் ஊடகங்களில் வெளியா

> **புதிய அரசாங்கமும் சூழலை அனுசரித்தே மீள்குடியேற்ற விடயத்தில் நடந்து கொள்கிறது. அப்படியான நெருக்கடி நிலையே தென்னிலங்கை அரசியலில் நிலவுகிறது. தேர்தல் நெருங்கும் சமயத்தில், மீள்குடியேற்றம் கத்திமேல் நடக்கும் வித்தையென்பது சிறுகுழந்தைக்கும் புரியக்கூடியதுதான்.**



கியிருந்தன. இனி காணவே மாட்டோம் என அவர்கள் நம்பிக்கை யிழந்து போயிருந்த நிலையில், அந்த ஊர்திரும்பல் நிகழ்ந்தது. ஊர்திரும்பியவர்களின் உணர்ச்சி வசப்பட்ட காட்சிகளை பார்த்து காவல்கடமையில் நின்ற சிப்பாய்களும் கண்கலங்கிய நிகழ்வுகளும் நடந்தன.

எனினும், அப்பொழுது விடுவிக்கப்பட்டது மொத்த நிலத்தில் ஆறில் ஒரு பங்கிற்கும் குறைந்தது. ஒரு பெருந்துயரத்தின் சிறு ஆறுதல் மட்டுமே அது. எஞ்சிய நிலத்தில் இன்னொருபகுதியை விடுவிப்பதாக அரசாங்கம் அறிவித்தும் அது நடக்கவில்லை. மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் இதற்கான பிரயத்தனங்கள் செய்யும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒப்புதல் அளித்தும் அது நடக்கவில்லை.

கடந்த சில தினங்களின் முன்னர் பாதுகாப்பு செயலாளர் பஸ்நாயக்க யாழ்ப்பாணம் வந்து, அரச மற்றும் படையதிகாரிகளுடன் நடத்திய பேச்சின் பின்னர் சில வீடுகளும், பாதிமூடப்பட்டிருந்த சில வீதிகளும் விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப் பட்டது. ஆனாலும் நடக்கவில்லை. வலிகாமம் மீள்குடியேற்றம் இன்னும் ஏன் தாமதமாகிறது? யார் அதனை தடுப்பது?

புதிய ஆட்சியின் இரண்டு மீள்குடியேற்ற முயற்சிக்கும் இராணுவம் அவ்வளவாக ஒத்துழைப்பு வழங்கவில்லையென்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. அமைச்சர் சுவாமிநாதனும் இது பற்றி இராணுவத்தினருடன் நேரடியாக பேசியிருந்தார். எனினும், அவராலும் அது முடியவில்லை. பாதுகாப்பு செயலாளர் வந்தார். சில வீடுகளையும், வீதிகளையும் மட்டுமே அவராலும் விடுவிக்க முடிந்தது. உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் வலிகாமத்தில் கட்டியெழுப் பப்பட்ட இராணுவ வலையத்தை இழப்பதற்கு இராணுவம் விரும்பாது என்பது புரியக்கூடியதுதான். அதற்காக தேசியபாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு வார்த்தை ஜாலங்கள் அவர்களிற்கு உதவலாம். எனினும், சொந்த மக்களையே அகதிகளாக்கி, அவலவாழ்வு வாழவைப்பதா தேசியபாதுகாப்பு என்பதே அறம்சார்ந்த மிகப்பெரிய கேள்வியாக உள்ளது.

புதிய அரசாங்கமும் சூழலை அனுசரித்தே மீள்குடியேற்ற விடயத்தில் நடந்து கொள்கிறது. அப்படியான நெருக்கடி நிலையே தென்னிலங்கை அரசியலில் நிலவுகிறது. தேர்தல் நெருங்கும் சமயத்தில், மீள்குடியேற்றம் கத்தி மேல் நடக்கும் வித்தையென்பது சிறுகுழந்தைக்கும் புரியக்கூடியது தான்.

அரசியலில் இரண்டாம் இன்னிங்சை ஆரம்பித்துள்ள மகிந்த ராஜபக்சவின் பிரதான அஸ்திரமே இனவாதமாகத்தான் உள்ளது. விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ போன்றவர்கள் பெரும் இனவாத பிரசார பீரங்கிகளாக தங்களை அடையாளப் படுத்தியுள்ள சூழலில், தற்போது மீள்குடியேற்ற நடவடிக்கை நடந்தால் அவர்கள் அதனை தென்னிலங்கையில் விற்று தீர்த்து விடுவார்கள் என்பது கசப்பான யதார்த்தமாக உள்ளது.

வடக்கில் நிலங்கள் விடுவிக்கப் பட்ட சமயத்தில் விமல் வீரவன்ச அதுபற்றி புரளியை கிளப்பியிருந்தது நினைவிருக்கலாம். சொந்த இடங்களிலிருந்து விரட்டப்பட்ட மக்களை மீள்குடியேற்றியபோது,



தமிழர்களிற்கு தனிநாடு அமைத்து கொடுப்பதாக புரளி கிளப்பினார். தமிழர்களின் மீள் குடியேற்றத்தையே வில்லங்கமாக்கி, வாக்கு சேகரிக்கும் நிலைமையே தென்னிலங்கையில் நீடிக்கிறது. யுத்தம் முடிந்து ஆறுவருடங்களின் பிந்தைய நிலையிது. இந்த ஆறு வருடத்தில் ஐந்தரை வருடங்களை மகிந்த ராஜபக்ச ஆட்சிபுரிந்திருந்தார்.

யுத்தத்தின் பின்னான காலத்தில் அதி அத்தியாவசிய கடமையான இனங்களிற்கிடையிலான புரிந்துணர்வை அவர் ஏற்படுத்தவில்லை என்பது இதன்மூலம் வெளிப்படுகிறது.

தனது காலக்கடமை ஒன்றை செய்ய தவறியவர், தற்போது இனவாதத்தை தூண்டி மீள்குடியேற்றத்தை தடுக்க முனைகிறார். ஆட்சியிலிருந்தாலும், ஆட்சியில் இல்லாவிட்டாலும் அவர் மீள்குடியேற்றத்திற்கு பெருந்தடையாக உள்ளார். தென்னிலங்கையில் இந்தநிலை நீடிக்கும்வரை எந்த முற்போக்கான ஆட்சியமைந்தாலும் தமிழர் விவகாரத்தில் தீர்வை காண முடியாதென்பதே கசப்பான யதார்த்தம்!

# “நான் ஒரு கொலைகாரன்”

## ஸ்கண்டிநேவியாவை உலுக்கிய தொடர் கொலைகள்

அந்த வண்டிகள் மிக அமைதியாக சாலையில் போய் கொண்டிருந்தன. வண்டிகளின் உள்ளேயும், வெளியேவும் அமைதி உறைந்திருந்தது. அது 1996ம் ஆண்டு. போலீஸ் வண்டிகள் சென்றுகொண்டிருந்தது சுவீடனில் இருந்து நோர்வேயை நோக்கி.

வண்டிகளின் உள்ளே, சுவீடனின் பிரபலமான அரசுத் தரப்புச் சட்டத்தரணி கிறிஸ்டர் வான் டர் க்வஸ்ட் (Christer Van Der Kwast), எதிரியின் வக்கீல் கிளாஸ் போரிஸ்ரோம் (Clas Borgstrom), போலிஸ் அதிகாரி சப்போ பெந்தினன் (Seppo Pentinen), மனோதத்துவ நிபுணர் பிர்ஜித்தா ஸ்ட்ரோல (Birgitta Ståhle) ஆகியோர் இருந்தனர். இவர்களுடன் உள்ளே இருந்ததுஞ் சுவீடனின் நீதித்துறையையே குழப்பிவைத்த தாமஸ் கிவிக் (ThomasQuick).இந்தஒட்டுமொத்த பயணத்தின் கதாநாயகன் தாமஸ் கிவிக்தான். இந்தப் பயணத்தின் பின்னணியைப் புரிந்துகொள்ள வேண்டு மானால், நோர்வேயின் பிரபல தினசரி பத்திரிகைகளில் ஒன்றான வேகே (VG)யில் வெளிவந்த "தீர்க்கப்படாத கொலைகள்" என்ற தொடரைப் படித்திருக்க வேண்டும். அதில் மூன்று கொலைகளை பற்றிய கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டது. அதில்தான் அடங்கியிருக்கிறது இந்த திகில் மர்மத்தின் முடிச்சு.

அந்த பத்திரிகைத் தொடரில் மூன்று கொலைகளைப் பற்றி எழுதியவர் இப்போது போலீஸ் வண்டியில் பயணித்துக்கொண்டிருக்கும் இதே தாமஸ் கிவிக்தான். 'நான் ஒரு தொடர் கொலையாளி' என்றும், 1964ஆம் ஆண்டிலிருந்து ஏராளமான கொலைகள் செய்திருக்கிறேன் என்றும் தாமஸ் க்விக் வெளிப்படையாக கட்டுரை எழுதியதைப் படித்துவிட்டு நோர்வே மக்கள் அதிர்ச்சியானார்கள். சரியாக தாமஸ் குறிப்பிட்டிருந்த காலப் பகுதியில்தான் நார்வேயில் ஏராளமான தொடர் கொலைகள் நடந்திருந்தன. தாமஸ் எழுதிய ஒப்புதல் வாக்குமூலத்தைப் படித்துவிட்டு, 'இவர்தான் அந்த தொடர் கொலைகளை செய்திருப்பாரோ?' என்ற சந்தேகத்தைசிலர் எழுப்பினார்கள். இதற்கான வாய்ப்புகள் இருக்கத்தான் செய்தன. ஏனெனில் நோர்வேயும், சுவீடனும் ஓர் நீண்ட எல்லையைப் பகிர்ந்துகொள்கிறது.



இதை வாசிப்பவர்கள் எழுப்பக்கூடிய கேள்வி, "இதென்ன பைத்தியக்காரத்தனம், யாராவது மடையன், தான் ஒரு தொடர் கொலையாளி என்று தம்பட்டம் அடித்துக்கொள்வானா?" என்பதே. ஆனால்இது ஒன்றும்பொய் அல்ல. தாமஸ்கிவிக் என்றகொலைகாரன், சுவீடனின் நீதித்துறையின் காதில் கெட்டிக்காரத்தனமாகப் பூச்சுத்திய கதை. இங்கே நான் அறிமுகப்படுத்தப்போகும் நபரும், விபரிக்கப்போகும் விடயங்களும் முழுக்க முழுக்க உண்மையானவையே. பெயர்களும், திகதிகளும், இடங்களும் கூட உண்மையானவையே!

அதிர வைக்கும் அந்த உண்மைகதையை அறிந்துகொள்ள காத்திருங்கள் அடுத்த இதழ் வரை...

**(திகில் தொடரும்)**

**–பிரதீபன்**



## பனங்காய்ப் பணியாரம்

**தேவையான பொருட்கள்**

பனம்பழம் - 02, கோதுமை மா - 1/2 கிலோ, கிரா சீனி - 400 கிராம், உப்பு - தேவையான அளவு, தண்ணீர் தேவையான அளவு, தேங்காய் எண்ணெய் 1/2 லீற்றர்.



**செய்முறை**

1. பணங்காயுடன் சிறிதளவு தண்ணீர் சேர்த்து அதில் உள்ள பனங்களியை நன்றாகப் பிழிந்தெடுக்க வேண்டும்.
2. அதன் பின்னர் பனங்களியை ஒரு பாத்திரத்தில் இட்டு அதனுடன் சீனி, தேவையான அளவு உப்புச் சேர்த்து, பனங்காயின் பச்சை வாடை போகும் வரை நன்றாக காய்ச்ச வேண்டும்.
3. காய்ச்சிய பனங்களி நன்றாக ஆறியதும், கோதுமை மாவை சிறிது சிறிதாகச் சேர்த்து கையில் ஒட்டாத பதம் வரும் வரை நன்றாகக் குழைக்க வேண்டும்.
4. அடுப்பில் ஒரு தாச்சியை வைத்து அதில் தேங்காய் எண்ணெய் விட்டு, எண்ணெய் சூடானதும் அதில் பனங்களிக் கலவைவையை சிறு சிறு உருண்டைகளாகப் போடவேண்டும்.
5. பனக்காய்ப்பணியாரம் பொன்னிறமாக வரும்போது வடித்து இறக்குங்கள்.
6. ஆரோக்கியமான, சுவையான பனங்காய்ப் பணியாரத்தை ஆறவைத்துப் பரிமாறுங்கள்.

**குறிப்பு:**

பனங்காய்ப் பணியாரத்தை நன்றாக சூடு ஆறிய பின்னர் உண்ண வேண்டும். காரணம் என்னவெனில் பனங்காய்ப் பணியாரத்தை சூடாகச் சாப்பிட்டால் ஒருவித கசப்புத்தன்மை இருக்கும். அது மாத்திரமல்லாமல் வயிறு சம்பந்தமான நோய்களும் ஏற்படும்.



# 7,000 கார்களுக்குச் சொந்தக்காரர்!



உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவரான, புரூனே நாட்டின் சுல்தான், ஆடம்பர கார்களை வாங்கி குவிப்பதில் அவருக்கு நிகர் அவர் மட்டுமே. எண்ணெய் வளமிக்க நாடான புரூனே, 1967-ல் தனி நாடானது. அதன் சுல்தானாக (மன்னராக) ஹசனன் போக்கியா முயுசுதீன் வாதுலா இருந்து வருகிறார்.

எண்ணெய் வளத்தால் கொழிக்கும் அந்நாட்டு சுல்தானின் வருமானத்திற்கு, அளவே இல்லாமல் போய்விட்டது. ஒரு வினாடிக்கு அவரது வருவாய், 5,277 இந்திய ரூபாய். அதுவே, ஒரு வாரத்திற்கு 3,191 கோடி ரூபாய். அவரது அரண்மனை இரண்டு லட்சம் சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. இங்கு 1,788 அறைகள் உள்ளன. இதுதான் உலகிலுள்ள அரண்மனைகளிலேயே மிகப் பெரியது.

இங்கு 275 ஆடம்பர குளியலறைகள் உள்ளன. அதில் உள்ள பொருட்கள் எல்லாம், தங்கம் மற்றும் வெள்ளியினால் செய்யப்பட்டவை. இவரது மகளுக்கு 18 வயது நிரம்பியதும் நடத்தப்பட்ட பிறந்த நாள் கொண்டாட்டத்தில் சுல்தான் அவருக்கு ஏர் பஸ் ஏ320 விமானம் வழங்கினார். அவர் பயன்படுத்துவதோ போயிங் 747 விமானம்.



இதை எல்லாம் விட, விதவிதமான கார்களை வாங்கி குவிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் சுல்தான். அவரது கேரேஜில், தற்போது 7,000 கார்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இவற்றின்

மதிப்பு, 2,312 கோடி ரூபாய். அவரிடம் உள்ள 7,000 கார்களில் அதிகளவில் இருப்பவை ரோல்ஸ்ராய்ஸ் கார்கள் தான். இவற்றின் எண்ணிக்கை மட்டுமே 604.

இது தவிர, மெர்சிடீஸ் பென்ஸ் 574, பெராரி452, ஆஸ்டின் மார்ட்டின் 300, பென்ட்லீ382, பி.எம்.டபிள்யூ 209, ஜாகுவார்179, போர்ஷெய்160, கோனிநெக்134, லம்போர்க்கினி21, மெக்லாரன் எப்1 ரகம் 8, பியூஜோ5, ஷெல்பி சூப்பர் 1 ஆகியவை குறிப்பிடத்தக்க பிரபல மொடல் கார்கள். இந்த அதிக விலை யுள்ள ஆடம்பர கார்களை தவிர, மேலும் நான்காயிரம் வெவ்வேறு நிறுவன கார்களும் அவருக்கு சொந்தமாக உள்ளன. இவ்வளவு கார்களையும் அவரது அரண்மனை அருகே உள்ள விமான நிலையத்தின் ஒரு மூலை யில் நிறுத்தி வைத்துள்ளார். கார்கள் நிறுத்தப்படும் பார்க்கிங் ஏரியாவுக்கும் கார் நிறுவனங்களின் பெயர்களையே சூட்டி உள்ளார். அவற்றை பராமரிப்பதற்கென தனித்தனியே மெக்கானிக்குகளையும் வைத்துள்ளார்.

அவர்களுக்கு உணவு, உறைவிடம், கைகொள்ள முடியாத அளவுக்கு சம்பளமும் வழங்கி வருகிறார். அதில் குறிப்பிட்ட சில கார் மெக்கானிக்குகளுக்கு ஆண்டுக்கு 1 கோடியே 15 லட்ச ரூபாய் சம்பளமாக வழங்கப்படுகிறது. உலகில் மிக முக்கிய கார் தயாரிப்பு நிறுவனங்களின் அனைத்து பிரபல கார்களும் அவரிடம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதில் சில குறிப்பிட்ட மாடல்கள், அவரது விருப்பத்திற்கேற்ப கார் நிறுவனங்கள் தயாரித்து அளித்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அடுத்த பிரதமர் யார்?

தேர்தலின் பின்னர் யார் பிரதமர்? இதுதான் இன்றைய இலங்கை அரசியலின் கணிக்க முடியாத விடயமாக எல்லோரது தலையையும் சுற்றவைத்துக் கொண்டிருக்கிறது. எந்த கட்சி வெற்றி பெறும் என்பது எல்லா தேர்தல்களின் போதும் இருக்கும் எதிர்பார்ப்புத்தான். ஆனால் இம்முறைதான் இரட்டை பரபரப்பு. எந்த கட்சி வெற்றிபெறுவார் என்பது ஒருபுறமிருக்க, மகிந்த பிரதமராவாரா இல்லையா என்ற கேள்வி எல்லோரிடமும் உள்ளது.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்றால் எந்த சிக்கலுமில்லை. ரணில் விக்கிரமசிங்க பிரதமராகிவிடுவார். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் என்ன நிலை? யார் பிரதமர்? நிமல் சிறிபால டி சில்வா போன்ற அனுபவம்மிக்க புதியவர்கள் பிரதமர் பதவியை பெறுவார்களா? அல்லது மகிந்த அணி அதை கைப்பற்றிவிடுமா? இம்முறை தேர்தலின் சுவாரஸ்யம் இதுதான். கடந்த பல தேர்தல்கள் குறிப்பாக மகிந்த ராஜபக்சவின் காலத்து தேர்தல்கள் அனைத்தும் பெரும் வன்முறையில் நடத்தி முடிக்கப்பட்டன. அரச வளங்கள் வாரியிறைக்கப்பட்டன. மாற்று அரசியல்கட்சிகள் எதுவுமே அரசியல் செய்ய முடியாத நிலையிருந்தது. எனினும், இந்தமுறை அப்படியல்ல.

புதிய அரசியல் கலாசாரமொன்றை காணமுடிகிறது. வீதிகளில் போஸ்டர்கள் இல்லை. வீதிவீதியாக கூட்டங்கள் இல்லை. அரச ஊழியர்கள் கட்டாயமாக கூட்டங்களிற்கு அழைத்து செல்லப்படவில்லை.

கடந்த பலவருடங்களாக மக்கள் மத்தியில் கலவரத்தை விதைத்து வந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள்தான் இப்பொழுது கலவரம். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் தமக்குள் குடுமிப்பிடி சண்டை பிடித்துக் கொள்வதை மக்கள் இம்முறை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நல்லாட்சியில் கவனிக்கப்படாமல் விடப்பட்ட ஒரு தொகுதி உறுப்பினர்கள், மகிந்த ராஜபக்சவை முன்னிறுத்தி அரசியல் செய்யும் முயற்சியொன்றை ஆரம்பித்துள்ளனர். 2005 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டவர் மகிந்தராஜபக்ச.நாட்டின் அதியுயர் பதவியை இரண்டுமுறை வகித்தவர். மூன்றாவது முறை தேர்தலில் போட்டியிட முயன்று தோல்வியடைந்துள்ளார். அதன்பின்னர் பிரதமர் பதவி தரப்பட வேண்டுமென பகிரங்கமாக அடம்பிடிக்கிறார். அவரை பிரதமராக்கியே தீருவோமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு தொகுதியினர் உறுதியாக கூறிவருகின்றனர். மகிந்த ராஜபக்சவிற்கு வேட்புமனு வழங்காதிருப்பதென ஜனாதிபதி மைத்திரி உறுதியாக இருந்தபோதும், அதனை வெற்றிகரமாக கடந்து குருணாகல் வரை மகிந்தவை ஆதரவாளர்கள் அழைத்து வந்துள்ளனர்.

வேட்புமனு வழங்குவதில் இருந்த எதிர்ப்பை எப்படி கடந்தார்களோ அப்படி கடந்து மகிந்தவிற்கு பிரதமர் பதவியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்றுக் கொடுக்குமா?

மறுவளமாக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றிபெற்றாலும் அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்படமாட்டதென ஜனாதிபதி பகிரங்கமாக கூறியுள்ளார். கட்சியிலுள்ள சிரேஸ்ட உறுப்பினர்களிற்கே வழங்கப்படுமென கூறியுள்ளார். இந்த சர்ச்சைதான் மக்கள் மத்தியிலும் நீடித்து வருகிறது. இந்த சர்ச்சை தொடர்பில் இவர்களின் கருத்தென்ன என்பதை அறிந்து கொள்வதற்காக தொடர்பு கொண்டபோது இப்படி சொன்னார்கள்.

**சி.தவராசா:**

"அரசியலமைப்பு சட்டத்தின் பிரகாரம்



ஜனாதிபதியிடமே அந்த அதிகாரம் உள்ளது. யார் பாராளுமன்றத்தை கட்டுப்படுத்துவார்கள் என ஜனாதிபதி கருதுவாரோ, அவரிற்கு பிரதமர் பதவியை வழங்க முடியும். பெரும்பான்மை பலத்தினால் மட்டுமே பிரதமரை தீர்மானிக்க முடியுமென அரசியலமைப்பு சட்டத்தில் சொல்லப்படவில்லை. ஆனால், பிரதமராக நியமிக்கப்படுபவர் தனது பாராளுமன்ற பெரும்பான்மையை குறிப்பிட்ட கால அவகாசத்தில் நிரூபிக்க வேண்டும். சிலவேளைகளில் இந்த விடயம் நீதிமன்றம் வரைகூட செல்லக்கூடும். அப்படியான நிலையேற்பட்டால் நீதிமன்றம் மக்களாணையையே முதன்மையானதாக பார்க்கும்."

**கலாநிதி முத்துகிருஷ்ணா சர்வானந்தா:**

"ஜனாதிபதிதான் நாட்டுக்குத் தலைவர். அவர்தான் அமைச்சரவையின் தலைவரும்.



1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பு சட்டத்தின்படியும், 19வது திருத்தத்தின் படியும் ஜனாதிபதிதான் இந்த விடயத்தில் இறுதி முடிவை எடுப்பார்.அமைச்சரவையின் தலைவர் என்பதன் அடிப்படையில் ஜனாதிபதியின் கீழ்தான் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை செயற்படுகிறது. இதுவரை இப்படியொரு சர்ச்சையேற்பட வாய்ப்பில்லாமல் வென்ற கட்சி சார்பில் பிரதமராக்கினார்கள். பிரதமராகுபவரின் கட்சி சார்பில் அதிக உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆனால், மகிந்தவை அதிக உறுப்பினர்கள் ஆதரித்தால், அந்த தரப்பால் பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் சில குழப்பங்களை ஏற்படுத்தி, சிறிய அழுத்தத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது"

**பா.அரியநேத்திரன்:**

"அதிக உறுப்பினர்களை கொண்ட கட்சியை சேர்ந்த, அதிக உறுப்பினர்களின்



ஆதரவை பெற்றவரையே பிரதமராக தேர்வு செய்வது வழக்கம். அதை ஜனாதிபதி அங்கீகரிப்பார். ஜனாதிபதியும், பிரதமரும் இதுவரை ஒரே கட்சியை சேர்ந்தவர்களாகவும், சுமுகமான உறவுள்ளவர்களாகவும் ஆட்சி நடத்தினார்கள். இம்முறைதான் சிக்கலான நிலை தோன்றியுள்ளது. கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஒன்றுதிரண்டால், மகிந்த ராஜபக்சவை பிரதமராக்க வாய்ப்புள்ளது."

**விமல் வீரவன்ச:**

"பிரதமரை தீர்மானிப்பது ஜனாதிபதிதான் என்பது தவறானது.பாராளுமன்றத்தில் அதிக உறுப்பினரின் ஆதரவை கொண்டவரையே பிரதமராக்க முடியும். அரசியலமைப்பில்



அது தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மகிந்தவிற்கு வேட்புமனு வழங்க முடியாதென்றார்கள். வழக்கினோம். அவரை பிரதமராக்க முடியாதென்கிறார்கள். நாங்கள் அவரை பிரதமராக்குவோம்."

**ராஜித சேனாரத்ன:**

"பிரதமரை தேர்வு செய்வது ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரம். அதுபற்றி தெளிவாக அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. அரசியலமைப்பை அறியாதவர்கள்தான்



புரளி கிளப்புகிறார்கள். ஜனாதிபதி 47 வருட அரசியலனுபவம் வாய்ந்தவர். அரசியலமைப்பை ஆராயாமல், மகிந்தவிற்கு பிரதமர் பதவி கொடுக்கமாட்டேன் என கூறியிருக்க மாட்டார். அதனால் யாரும் அஞ்சத் தேவையில்லை. ஜனாதிபதி தனக்க வழங்கப்பட்ட மக்கள் அணையை மீறமாட்டார்."



இப் பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேட்) லிமிற்ரட் நிறுவனத்தினரால் இரத்மலானை,
ஸ்ரீ தர்மராம வீதியில் இல 59 இல் உள்ள எடிசன் அட்வரைசிங் நிறுவனத்தாரின் அச்சகத்தில் 28.07.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது